தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவராண்டு – 2029 வெகுதானிய

ஆவணி

துணர் : 72 செப்டம்பர் - 1998 [மலர் : 5

தமிழ்ப்பொழில்

பதிப்பாசிரியர் : பாவலர்.ச.பாலசுந்தரம்

உள்ளுரை

1. அறிவு 161
2. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
டாக்டர்.இரா.பாலசுப்பிரமணியன் 163
3. பேச்சாளரின் அனுபவங்கள்
முனைவர்.இரா.குருநாதன் 167
4. மகட்பாற் காஞ்சி காட்டும் மண முறைகள்
முனைவர்.கி.இராசா 175
5. திருக் காவணம்
க.குழந்தைவேலன் 181
6. கிருட்டின எசுர் வேதத்தின் நோக்கங்கள்
முனைவர்.சு.சௌந்தரபாண்டியன் 189
7. திருவள்ளுவர் ஒரு சட்ட மேதை
வி.கார்த்திகேயன் 191
8. மேலாண்மை பொன்னுசாமியின் நாவல்களில் கலையும், கருத்தும்
முனைவர்.தெ.திருஞானமூர்த்தி 195
9. நூல் திறனாய்வு
முனைவர்.த.மலர்க்கொடி 197

தமிழ்ப் பொழில் கட்டணம்

	உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ. 5.00	ரூ. 10.00
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60.00	ரூ. 120.00
வாழ்நாள் கட்டணம்	ரூ. 500.00	ரூ. 1000.00

வேண்டுகோள்

தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப்பெறுகின்றன. கட்டுரைகள் ஆறு பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்தித் தருக. இருவரி இடைவெளியிட்டு, தட்டச்சிட்டு இருபடிகள் அனுப்புக. வெளியிடப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா.

அறிவு

(ஆசிரியர் பக்கம்)

அண்மைக் காலங்களில் பல நிதிநிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கில் வைப்பு நிதியாக வைத்த செல்வத்தை இழந்து அதிர்ச்சியுற்றோரைக் காணுகின்றோம். பல்லாயிரக்கணக்கில் செலவிட்டும் தேர்தலில் தோற்றுப்போய் அதிர்ச்சியில் நிலை குலைந்து போனவர்களைக் காண்கின்றோம். அயல்நாட்டில் வேலை பெற்றுத் தருவதாகப் பெருந்தொகை பெற்றுக் கொண்டவர் அதனை நிறைவேற்றாமையால் அதிர்ச்சியுற்று வாடுபவர்களைக் காண்கின்றோம். சிறந்த நடிகையாகலாம் பேறும் புகழும் ஈட்டலாமென மயக்குவோர் பேச்சினை நம்பி வாழ்விழந்து அதிர்ச்சியில் தற்கொலை புரிந்து கொள்ளும் இளம் பெண்டிரைப் பற்றிக் கேள்விபடுகிறோம். உற்ற நண்பர் எனக்கருதி இணைக் கையொப்பமிட்டுத் தன் உடைமைகளை இழந்து வருந்துவோரைக் காணுகின்றோம். இங்ஙனம் பலர் அதிர்ந்து துன்புற்று வாழ்விழப்பதைக் காணுகின்றோம்.

பலர் இந்நிலையை எய்துவதற்குக் காரணம் என்ன? அறிவி;னமையா. அன்று யாவரும் தம் எதிர்கால வாழ்வை எண்ணியும் மக்களையும் நண்பர்களைப் போல நடிப்பவர்களையும் நம்பியும் ஏமாற்றப்பட்டவரேயாவர். இவர்களுள் பலர் நன்கு கற்றவர்களாகவும் உள்ளனர். பின்னர் எதனால் அந்நிலைக்கு ஆளாயினர்.

அவர்தம் அறிவு நேர்மைக்கும் உழைப்பிற்கும் துணை புரியாமல் அறந்தழுவாத பேரவாவிற்குத் துணைபோனமையேயாகும். இவ்வறிவும் தீதின் பாற்செலுத்தும் அறிவேயாம். ஒரு செயலை மேற்கொள்ளுங்கால் அதனான் வரும் எதிர்விளைவுகளைச் சிந்திக்காத அறிவு.

ஒருவர் செலுத்தும் தொகைக்கு மூன்றில் ஒரு பங்கு வட்டியாகத் தருவோம் என்று ஒருவர் கூறினால் செலுத்தும் முதற் பொருளுக்குக் காப்புறுதி உளதா எனக் காணவேண்டாவா? தேர்வில் நிற்பவர் வாக்களார் உள்ளங்களில் நாம் எந்த நிலையில் உள்ளோம். எதிராளர் தகுதி என்ன ஆற்றல் என்ன எனக் கணக்கிட வேண்டாவா? அயல் நாட்டிற் பணி பெற்றுத் தருவேன் என்பவரின் செல்வநிலை ஒழுக்கம்,

முன்னர் புரிந்துள்ள செயல் முதலியவற்றை ஆராய்ந்து தெளிய வேண்டாவா? சிறந்த நடிகையரின் தொடக்க கால நிலையென்ன அத்துறையில் சீரிழந்தவர் எத்தனைப் பேர் என தெரிந்து கொள்ள வேண்டாவா, தமது இளமையும் அழகுமே முதலீடாதற்குச் சாலுமா என்று எண்ண வேண்டாவா. இணைக் கையொப்பம் இடுமாறு வேண்டும் நண்பர் அக்கடனை எதற்காகப் பெறுகின்றார் அவர் செல்வ நிலை ஈட்டும் ஊதியம் அவர் தம் நாணயம் முதலியவற்றைத் தெரிய வேண்டாவா?

மழை பெய்யின் நனையாமலிருக்க குடை கொண்டு செல்கின்றோம். கல் முள்ளும் ஊறு செய்யாமலிருக்கச் செருப்பணிந்து நடக்கின்றோம். பசி மயக்கம் நேராமைப் பொருட்டு உணவுண்கின்றோம். களவு போகாமற் பொருளைக் காக்க பெட்டியிலிட்டும், அறைக்குள் வைத்தும் பூட்டுகிறோம். அவ்வாறே எதிர் கால வாழ்விற்குக் காப்பகச் செய்யும் செயல்களைச் சிந்தித்துச் செய்யின் தன்னையறியாமல் யாதொரு துன்பமும் நேராது. அறிந்து வரும் துன்பங்கள் அதிர்ச்சி தருவதில்லை. அது ஊழ்வயத்தான் நேர்வது இயற்கை ஆற்றலால் விளைவது. ஏமாறுவதும் ஏமாற்றப்படுவதும் அதிர்ச்சி தரும் நோயைத் தருவனவாகும். ஏமாறுவதற்கும் ஏமாற்றப்படுவதற்கும் காரணமாக அமைவது உழைப்பின்றி ஊதியத்தைப் பெறவிழையும் பேராசையாகும்.

இத்தகு பேராசையைப் பகுத்தறிந்து நீக்கும் அறிவே எதிராகாக் காக்கும் அறிவாகும். அவ்வறிவினை உடையவர்க்கு அதிர்ச்சிதரும் துன்பங்கள் நேரா என்கிறார் பொய்யா மொழியார். அவ்வாய்மொழி தான்

“எதிரதாக்காக்கும் அறிவினார்க்கில்லை
அதிர வருவதோர் நோய்” என்பதாகும்.

ச.பாலசுந்தரம்

மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

டாக்டர்.இரா.பாலசுப்பிரமணியன்,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே.

மோசிகீரனார் பாடிய புறநானூற்றுப்பாடல் (186) இது. இப்பாடலில் சங்ககால அரசியலின் அடிப்படைக் கருத்துக் கூறப்படுகிறது. உலகின் நலனுக்கு நெல் உயிரன்று ; நீர் உயிரன்று ; மன்னனின் ஆட்சிநெறிதான் உயிர். இதனை உணர்ந்து செயல்படுவதுதான் மன்னனின் கடமையாகும்.

உடலும் உயிரும்

நாட்டிலுள்ள குடிகள் (Citizens) உடலைப் போன்றவர்கள். அவர்களிடம் உயிராய் பொருந்தி இயங்க வேண்டியது மன்னரின் கடமையாகும். சங்ககால அரசியல் முடியாட்சி ஆகும். முடியாட்சியின் வேந்தன்தான் மையப்பொருள்.

ஆங்கமைவு எய்தியகண்ணும் பயம் இன்றே
வேந்து அமைவு இல்லாத நாடு

என்பது வள்ளுவம். போரும் வீரமும் போற்றப்பெற்ற சங்ககாலத்தில் அறத்தோடு (Social Virtue) தொடர்புடைய அரசியல் மதிப்பு கூறப்படுகிறது. இம்மதிப்பு சங்ககால முடியாட்சிக்கு மட்டும்தான் பொருந்தும் எனக்கூறவியலாது. எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் பொருந்துகிற அரசியல் கோட்பாடோடு தொடர்புடையது.

மன்னனுக்குப் பதில் ஆட்சித்தலைமை என இக்காலக் குடியாட்சியில் பொருள் கொள்ளலாம். ஆட்சித்தலைமையில் இருப்பவர்கள், அவர்கள் நாட்டுக்குடிகளிடம் உயிராகப் பொருந்தி அறநெறியில் ஆட்சி நிகழ்த்த வேண்டும்.

தனிமனிதனும் ஆட்சித்தலைமையும்

தனிமனித வாழ்க்கைக்கும் ஆட்சித்தலைமையில் இருப்பவர்களின் வாழ்க்கைக்கும் வேறுபாடு உண்டு. 'தான்' 'தனது' 'தனக்கு' போன்ற

குறுகியவட்டங்கள் ஆட்சித்தலைமையில் உள்ளவர்களிடம் இடம்பெறுதல் கூடாது. பொதுவாழ்க்கையில் ஈடுபடுகிறவர், ஆட்சித்தலைமைக்கு வருகிறவர்கள் சொந்த வாழ்க்கையில் பல பலவீனங்களையும் குறைகளையும் உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களே முன்மாதிரி வாழ்க்கை வாழாவிட்டால் குடிமக்கள் எங்ஙனம் அவர்களைப் பின்பற்றுதல் இயலும்?

அறித்திற்கான தடைகள்

நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே! என்பதும் புறநானூற்றுக் காலச் சிந்தனையாகும். (312). மன்னனின் அறவழி நிர்வாகத்திற்குப் பல தடைகள் உள்ளன. அவைகளைக் குறித்து பதிற்றுப்பத்து

சினனே, காமம், கழிகண் ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை
தெறல்க டுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறம்தெரி திகிரிக்கு வழியடை ஆகும்

என்று குறிப்பிடுகிறது. இத்தடை முடியாட்சி மன்னனுக்கு மட்டும் உரியதில்லை. குடியாட்சியில் ஆட்சித்தலைமையில் உள்ளவர்களுக்கும் உரியதாகும். ஆனால் இக்காலத்தில் ஆட்சிபீடத்தில் வருகிறவர்கள் அத்தடைகளை வென்றிருக்கிறார்களா?

திரியாச்சுற்றம்

மன்னனின் எண்ணமெல்லாம் உயர்ந்த சிந்தனையோடு தொடர்பு பெற்றிருப்பதால் தவறுவதற்கு வாய்ப்பில்லை. தவறினாலும் அவர்களைச் சுற்றியுள்ள சுற்றம் 'நல்சுற்றமாகவும்' கொடுமை இலாத சுற்றமாகவும் இருக்கும் அவர்களை,

'பாஅல் புளிப்பினும் பகலிருளினும்'
நாஅல் வேதநெறி திரியினும்
திரியாச் சுற்றமொடு'

என்று குறிப்பிடுவர். இக்கால அரசியல் தலைமையார்க்கு அத்தகு 'சுற்றங்கள்' இருக்கின்றனவா? திரிகிற சுற்றங்கள்தான் இருக்கின்றன. ஆட்சியும் அதிகாரமும் இருக்கிறபோது இருக்கிற சுற்றங்கள் அவை போனபின் நீங்கிவிடுகின்றன. இத்தகு திரிகிற சுற்றங்களை நம்பி ஆட்சித்தலைமையும் அரசியலும் இருக்கிற இன்றைய நிலை அவலத்திற்கு உரியது. சந்தர்ப்பவாதம் இங்கு செயல்படுவதால் தூய்மையான ஆட்சிக்கு வாய்ப்பில்லாமல் போகிறது.

அருளும் அச்சமும்

அக்கால மன்னர்கள் 'குடிபழிதூற்றும்' நிலையை விரும்பமாட்டார்கள். அந்த இழிந்த நிலைக்கு அஞ்சுவார்கள். ஆருள் உள்ளமும் பழிபாவங்களுக்கு

அஞ்சுகிற மனப்பான்மையும் மன்னர்களிடம் இருந்ததால் 'இறைவன்' எனக்கருதப்பெற்றார்கள்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்

என்கிற வள்ளுவர் கருத்து நோக்கத்தக்கதாகும். மன்னர் அறநெறியில் இயங்குகிற போது இறைவனுக்கு நிகராகக் கருதப்படுகிறார்கள். இக்காலத்தில் ஆட்சித்தலைமைக்கருகில் இருக்கிற திரிகிற சுற்றங்கள் ஆட்சித்தலைவரை இறைவனின் அவதாரமென்றும் இறைவியின் அவதாரமென்றும் புகழ்ந்து பெரிய பெரிய 'கட்' அவுட்டுக்களைக் கட்டியும் சுவரொட்டிகள் மூலமாகவும் விளம்பரப்படுத்துகிற நிலை நல்லாட்சியின் அடையாளமல்ல. . . .?

இறைவனைப் போல உச்சஆற்றல் ஆட்சித்தலைமைக்கு இருக்கிறது. ஆக்கமும், அழிவும் ஆட்சித்தலைமையின் செயல்பாடுகள் ; ஆற்றலில், பதவி நிலையில் அகங்காரம் கொள்ளாமல் நிலைபெறுகிற ஆட்சி அறஆட்சி அற ஆட்சியைச் சங்ககால முடியாட்சியில் செங்கோலாட்சி என்றனர்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு

என வள்ளுவம் கூறும். ஒருவேளை அறஆட்சியில் குறைநேர்ந்தால் செங்கோல் வளைந்துவிடும். கோவலனைக் கொலைப்படுத்துவதற்குக் காரணமாகி பாண்டியனின் செங்கோல் வளைந்த போது தன்னுயிரை நீத்து நிமிர்த்தினான் என்பது சிலப்பதிகாரச் செய்தி. குடிகள் கொடுங்கோலாட்சி எனப் பழிதூற்றிவிடக்கூடாது என்பதில் அக்கால அரசர்கள் அஞ்சினர். அந்த அச்சம் நியாயமான அச்சம்.

மயிர்நீப்பின் வாழாக்கவரிமானா?

அந்த நியாயமான அச்சம் இன்றுள்ள ஆட்சித்தலைவர்களிடம் இல்லையே பதவியில் விட்டு இறங்கியதும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக வழக்காடு மன்றத்திற்குப் போகிற நிலை. அந்நிலையையும் விளம்பரப்படுத்தி, தியாகப்படுத்தி மறுபடியும் பதவிக்கு வருகிறமுறை. ஆட்சித்தலைமைக்கும், அரசுக்கும் இப்படியொரு இழிநிலை இருப்பதை இன்னும் நீடிக்கவிடுவது நியாயமா?

அறஆட்சி நடந்தால்தான் மழைபெய்யும் ; விளைவு இருக்கும் ; இயல்பு அல்லன நடக்காது ; பழிவராது என்பது குடிகளின் பரவலான நம்பிக்கை. அரச வாழ்க்கையின் உண்மையான நிலையை மதிப்பிட்டு

சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவன் கூறுகிற செய்திகள் இக்கால ஆட்சித்தலைமை உள்ளவர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

மழைவளம் கரப்பின், வான்பேர்அச்சம்
பிழைஉயிர் எய்தின், பெரும்பேர் அச்சம்
குடிபுரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதைக் காக்கும் நன்குடிபிறத்தல்
துன்பமல்லது ; தொழுகதவுஇல்.

காந்தி பிறந்த மண்

சங்ககாலத்தில் வீரரும், போரும் இருந்த காலத்தில் அறமதிப்புக்கள் அரசியலில் போற்றப்பெற்றன. போர் என்கிற வன்முறையை ஒழித்து சத்தியத்தையும், அகிம்சையும் நிலைநாட்டிய காந்தி பிறந்தமண்ணில் அரசியல் நிலை தாழ்ந்தது வியப்பாக உள்ளது.

பதவி ஆசை, அதிகாரவெறி, பழிவாங்கும் உணர்வு, சுயநலம், கட்சிநலம் இவைகளை அடைவதற்காக எத்தகு குறுக்குவழிகளையும் கடைப்பிடித்தல் ; கொள்கைகளை உருவாக்காமல் சந்தர்ப்பவாதத்தைப் பயன்படுத்துல் ; திரைப்படத்துறையைச் சார்ந்தவர்களின் விளம்பரமதிப்பை அரசியல் மதிப்பிற்குச் சாதகமாக்கிற இழிநிலை ஆட்சித்தலைமைகள் குடிமக்களை நினைக்கிற காலம் தேர்தல் காலம்தான். அப்புறம் அவர்கள் இருக்கிற நாற்காலிப்பக்கம் குடிமக்கள் நெருங்கக்கூடமுடியாது.

நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித்தந்த மகாத்மா காந்தி தன்னை அரசியல்வாதி என்று கூறவிரும்பவில்லை. இதனை 'யங் இந்தியா' இதழில் அடிக்கடி எழுதியிருக்கிறார்.

நல்ல அரசியல் தலைவர்களின் பெயரைச் சொல்லுகிறார்கள். படமாக ஆக்கி விளம்பரப்படுத்துகிறார்கள். இவைகளெல்லாம் தேர்தல் காலத்தில் ஒட்டுவாங்குவதற்காகத்தான். நல்ல தலைவர்களின் கொள்கைகள் காற்றில் பறக்கவிடப் பெறுகின்றன. உலகத்திற்கே தலைமைநிலையை வழங்கக்கூடிய ஆற்றல் காந்திமகானுக்கு இருந்தது. நேருவிற்கு இருந்தது. இன்றோ .... இந்தியாவை ஸ்திரப்படுத்தி ஆள்வதற்கு நல்ல தலைமை இல்லை .... வளரும் இளந்தலைமுறையினர் அக்குறையைத் தீர்த்து வைப்பார்களா?

****

பேச்சாளரின் அனுபவங்கள்

முனைவர்.இரா.குருநாதன்,
முதல்வர்,
த.உ.க.க.கல்லூரி,
தஞ்சை - 613 002.

பேச்சாளர்கள் சாப்பாட்டுக் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடாது. இன்ன இடத்தில்தான் தூங்குவேன் என்று சொல்லக் கூடாது. மேடைப்பேச்சு என்பது பிரசவத்திற்குச் சமமானது. சில நேரங்களில் சுகப்பிரசவமும், பல நேரங்களில் குறைப் பிரசவமும் ஏற்பட்டு விடுவதுண்டு. எத்தனையோ அனுமானம் அதற்கு நடுவே வருமானம். இதுவே பேச்சாளன் நிலை. அவன் நிலையை மற்றவர்கள் நினைப்பது சுலபம்.

பேசவேண்டும் என்ற ஆர்வம் பேச்சாளனுக்கும், கேட்க வேண்டும் என்ற ஆர்வம் கேட்பவருக்கும் இருக்க வேண்டும். அதில்வரும் குறைபாடுகள் பேச்சாளனைப் பாதித்து விடும். பேசுவதற்கு முன் கூட்ட அமைப்பாளர் பேச்சாளரைப் பாராட்டினால், காசு குறைவாகப் போகிறது என்று பொருள்.

பேசுமிடத்தில் கூட்டத்தைக் காணவில்லை என்றால் பேச்சாளனுக்கு வாட்டம் தான் ஏற்படும். "நீங்கள் பேசுங்கள் கூட்டம் வரும்" என்று சில அமைப்பாளர்கள் சொல்வதுண்டு.

மேடைப் பேச்சாளன் சோதனைக்கும் சாதனைக்கும் உட்பட்டவன். பேச்சாளர்களுக்கு மழையும், மின்சாரக்கோளாறும் அலர்ஜி. பாதி நிகழ்ச்சியில் மழை வந்தால் பாதிப்பு இருக்காது. நிகழ்ச்சிக்கு முன் மழை வந்தால் பாதிப்புதான். இருந்தாலும் நாங்கள் பேசுவதற்கு முன் ஓர் ஊரில் கனமழை பெய்து மேடை பூமிக்கு ஆடையானது. நீண்டதூரம் பயணத்தில் வந்த எங்களுக்கு மனக்கவலையோடு பணக்கவலையும் பிடித்துக் கொண்டது. நிகழ்ச்சி அமைப்பாளர்களின் முகங்களில் ஆனந்தம் தாண்டவமாடியது. நாங்களும் புரியாமல் தவித்துக் கொண்டிருந்தோம். நிகழ்ச்சி ஏற்பாடு

செய்தவர் “நிகழ்ச்சி நடக்காவிட்டாலும் பரவாயில்லை எங்கள் ஊரில் மழை பெய்து ஒன்றரை வருடங்கள் ஆகிவிட்டது” நீங்கள் வந்தது புண்ணியம் என்று கூறிகைப் பேசிய தொக்கு மேல்தந்து உபசரித்தனர். எல்லா ஊரிலும் இதுபோல நடந்தால் நன்றாயிருக்கும். நடக்குமா?

ஒரு நிகழ்ச்சி சிறப்பாக அமையப் பேச்சாளர் உரிய நேரத்திற்கு வரவேண்டும். நிகழ்ச்சி அமைப்பளருக்கு உடல்நலக் குறைவு ஏற்படாமல் இருக்க வேண்டும். மேடைப் பேச்சாளர் மைக்செட்காரரிடமும், திருமணம் நடத்துபவர் சமையற்காரரிடமும் வாக்குவாதம் செய்யக்கூடாது. செய்தால் காரியம் கெட்டுவிடும்.

நகைச்சுவைப் பேச்சாளர் வரிசையில் இடம்பெற்ற எனக்குக் கிடைத்த சில அனுபவங்கள் பிறருக்கு மகிழ்வைத்தான் தந்திருக்கின்றது. அவற்றில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று எனக்கும் தெரியும்.

மேடைக்கு வரும்போது சில சமயங்களில் நேரமாகிவிடும். நேராக மேடைக்கு அழைத்துச் சென்று அமர வைத்துவிடுவர். பசியோ காதை அடைக்கும். மேடையில் இருக்கும் பழத்தட்டு என்னைப் பார்த்துச் சிரிக்கும். அதை எடுத்துத் தின்றால் யாரும் எதுவும் நினைப்பார்களோ? என்ற அச்சம். பார்த்தால் பசிதீரும் என்று இருந்து விடுவதுண்டு. பேசவருபவர்களுக்கு வயிறும் இருக்கிறது என்று சில அமைப்பாளர்கள் மறந்து விடுவதுண்டு. சில அமைப்பாளர்கள் விதவிதமான உணவு வகைகளை வைத்து வாழ்வை வெறுக்கவும் செய்துவிடுவர்.

ஒருமுறை நிகழ்ச்சி 7.00 மணிக்கு அறிவிக்கப்பட்டது. மணி 10.00 ஆனபோதும் அறிவிப்பாளர் 7.00 மணி என்றே கதறிக்கொண்டு இருந்தார். கூட்ட அமைப்பாளரை ஒருவரை அழைத்து நிகழ்ச்சியைத் தொடங்கி விடுங்கள் என்றேன். “தலைவர் வரட்டும” என்றார் கூட்டத்தலைவர் 10.30க்கு வந்தார். நிகழ்ச்சியைத் தொடங்குங்கள்

என்றேன். அமைப்பாளர் "செயலர் வரட்டும்" என்றார். அன்றும் பசிதான். டிபன் ரெடியா? என்றேன். 'இட்டிலி வரட்டும்' என்றார்.

செஞ்சோற்றுக்கடன் தீர்த்ததில் சிறந்தவன் கர்ணனா? கும்பகர்ணனா? என்ற பட்டிமன்ற நடுவராக நான் பொறுப்பேற்றிருந்தேன். முனீசுவரன் கோயில் கும்பாபிஷேகம். நிகழ்ச்சி உரிய நேரத்தில் தொடங்கி விறுவிறுப்பாகக் களை கட்டத் தொடங்கியது. திடிரென ஒருவன் மேடைக்கு முன்பு வந்து "நிறுத்துங்க பேசினது போதும், குளத்தில் கால் கழுவ தண்ணீர் இல்லே. அதைப்பத்தி பேசுங்க" என்றார். நாங்கள் கவிஞர் தான்சேனாக இருந்திருந்தால் கவிபாடி மழை பெய்யச் செய்திருப்போம். தண்ணியைப் பற்றிக் கவலைப்பட்டவரைத் தள்ளிக்கொண்டு போயினர்.

ஓர் ஊருக்குச் சென்ற போது நிகழ்ச்சி முடிய நெடுநேரம் ஆகிவிட்டது. நிகழ்ச்சி அமைப்பாளரிடம் என் ஊருக்குப் பஸ் இருக்கிறதா? என்றேன். விடிய விடிய பஸ் இருக்கு என்றார். பிறகு நடுரோட்டில் நின்றேன். விடிந்தே விட்டது. விடிய விடிய பஸ் இருக்கின்றது என்று சொன்னீர்களே? என்றேன். நான் சொன்னது சரிதானே. விடிய விடியதான் பஸ் வரும் என்றார். அவர் சிலேடை என் தலையின் இருபக்கமும் வலியை ஏற்படுத்தியது.

தமிழில் சில சொல் இடத்திற்குத் தகுந்தாற் போல் பயன்படும். ஒரு நிகழ்ச்சிக்குச் சென்று நிகழ்ச்சி முடிந்ததும், அமைப்பாளர் "வாங்க டிபன் பண்ணுவோம்" என்றார். எங்கள் குழுவில் இருந்த குறும்புக்காரர் எங்களுக்கு டிபன் பண்ணத் தெரியாது. சாப்பிடத்தான் தெரியும் என்றார்.

மேடை ஏறி பேசாதவர்கள் கூட நயமான நகைச்சுவை வார்த்தைகளைப் பேசுவதுண்டு. நான் சென்ற ஒரு நிகழ்ச்சி தொடங்கும் முன்பு மழை சற்றுப் பெரிதாகத் தூறத் தொடங்கியது. அமைப்பாளர்களில் ஒருவர், மழை பெரிசாயிடுச்சி என்ன செய்யலாம்?

என்றார். அருகே இருந்த ஒருவர் பெரிசாயிடுச்சின்னு பத்திரிக்கை அடிங்க என்றார். எவ்வளவு ஆழமான நகைச்சுவை உணர்வு?

நகைச்சுவைப் பேச்சாளர்கள் பேசத் தொடங்கும்போதே, மக்கள் உணர்ந்து சிரிக்க வேண்டும். அப்போதுதான் பேச்சு வெற்றி பெறும். பட்டிமன்ற நடுவராக நான் பொறுப்பேற்று, இருபது நிமிடங்கள் நகைச்சுவைத் தோரணங்களைக் கட்டினேன். எதிரே இருப்பவர்கள் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தென்படவில்லை. என் நகைச்சுவை உணர்விற்கு ஏற்பட்ட சோதனையா? இல்லை இந்த ஊர் மக்களுக்குச் சிரிக்கத் தெரியாதா? என்று யோசித்து, என் குழு அன்பரிடம், என்னப்பா ஜனங்கள் கல்லாயிட்டாங்களா? என்று கேட்டேன். அந்த அன்பர், நேற்று இதே மேடையில் நான் தனிச்சொற்பொழிவு நிகழ்த்தினேன் என்றார். நான் பேசும் நகைச்சுவைத் தோரணங்களை நேற்றே அவர் கட்டிவிட்டது தெரிந்ததும் நான் மாற்றிக் கொண்டதால் தப்பித்தேன். காப்பியடித்துப் பேசும் நகைச்சுவையில் கொஞ்சம் கற்பனையைச் சேர்த்துக் கொள்ளவில்லையானால் சாயம் கரைந்துவிடும்.

மேடைப் பேச்சின் நடுவே சில நுணுக்கமான கேள்வியைக் கேட்டு, சரியான பதிலுக்கு ஏதாவது சிறிய பரிசு தருவது என் வழக்கம். ஒரு முறை, சிறிய புதிய பையுடன் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றேன். "தமிழ்நாட்டில் காதுக்கு என்ன பெயர்? சரியான பதிலைச் சொன்னால் இந்தப் புதிய பை பரிசு என்றேன். "கர்ணம்" என்று யாரும் சொல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் அவ்வாறு கூறினேன். சற்று நேரத்தில் ஒரு சிறுவன் சரியான பதிலைச் சொல்லிவிட்டான். அன்றிலிருந்து கேள்விக்குப் பரிசு என்பதை நிறுத்திவிட்டேன்.

மேடைப் பேச்சாளருக்குப் பேச்சுமட்டும் தெரிந்தால் போதாது. ஊர்ப்பஞ்சாயத்தும் செய்யத் தெரியவேண்டும். ஓர் ஊருக்குப் போனபோது, மேடைக்கு அருகே கூட்டம் இல்லை. அமைப்பாளரை அணுகி காரணம்

கேட்டேன். அவ்வூர் ஒரு பெரிய கிராமம். உள்ளூர்வாசிகளின் பெயர்கள் அழைப்பிதழில் அச்சிடப்படவில்லை என்று அக்கிராம மக்களுக்குக் கோபமாம். அந்நிகழ்ச்சி அமைப்பாளரோடு சேர்ந்து ஊர் மக்களிடம் மன்னிப்புக் கேட்பதில் நான்தான் முதலிடம் பெற்றேன். பஞ்சாயத்து முடிய மணி 11 ஆனது. நான் மேடையில் அன்று பேசியதைவிட பஞ்சாயத்தில் பேசிய நேரமே அதிகம். அப்பேச்சு இலசவம்.

வந்த பேச்சாளரை எப்படியாவது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொரு அமைப்பாளருக்கும் இருப்பதுண்டு. ஒரு திருமண வாழ்த்துரைக்கு ஒத்துக் கொண்டு அத்திருமணம் நடக்கும் இடம் தெரியாமல் 4 மணி நேரம் தாமதமாகச் சென்றேன். மணவீட்டில் மூன்றாவது பந்தி நடந்துகொண்டிருந்தது. என்னைப் பார்த்ததும் என்னைப் பேச அழைத்தவர் ஒலி பெருக்கியைத் தயார் செய்து, "பேராசிரியர் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசுவார்" என்றார். நான் மணமக்கள் எங்கே என்றேன். "அவர்கள் ஊருக்குப் போய் விட்டார்கள்" என்றார். மணமக்களை வாழ்த்திப் பேசினேன். எந்நிலை எனக்கல்லவா தெரியும்?

பேச்சாளர்களுக்குச் சிலநேரம் காலத்தோடு செல்ல முடிவதில்லை. ஒரு கோயில் நிகழ்ச்சிக்கு மூன்று மணிநேரம் தாமதமாகச் சென்றோம். 8 மணி நிகழ்ச்சிக்கு 11 மணிக்குச் செல்லும்படியாயிற்று. கூட்டத்துத் தலைவன் என்பதால் அமைப்பாளரை அணுகினேன். அவர் முகத்தில் ஒரு கேஸ் அடுப்பு இருந்தது. அவர் சட்டைப் போடாத நபர் ஒருவரைக் காட்டி அவரிடம் போய் கேளுங்கள் என்றார். அப்பெரியவர் அவ்வூரில் பெரிய பணக்காரராம். அவர் ஒருவரே அக்கோயிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்தவராம். அவரிடம் சென்று "வணக்கம்", என்றேன். "வணக்கம்" என்ன வேணும்? என்றார். அந்தப் பதிலை நான் எதிர்பார்க்கவில்லை.

"நாங்க பேச வந்திருக்கிறோம்" என்றேன். "பேசுங்களேன் அதோ மேடை", என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். மூன்றரை மணி நேரம் நிகழ்ச்சியை நடத்தி முடித்தோம். ஊர்மக்கள் நீன்றாக ரசித்துக் கேட்டார்கள். விடியும் வரை தேடினோம். அமைப்பாளரையும் காணவில்லை கோயில் கட்டிய பெரியவரையும் காணவில்லை. அப்போதுதான் புதிய கோயிலின் சிலையை பார்த்தேன். முருகன் ஆண்டிக் கோலத்தில் நின்றுகொண்டு எங்களைப் பார்த்துச் சிரித்தார்.

நிகழ்ச்சி முடிந்ததும் நாட்டு வாழ்த்தை டேப்பில் போடாமல், பாடுவதே நலம் என்பது என் மேடை அனுபவம். ஒரு பள்ளி நிகழ்ச்சி முடிந்ததும், நாட்டுப்பண் என்று தலைவர் அறிவித்தார். அனைவரும் எழுந்து நின்றோம். டேப்பில் "ஏரிக்கரையின் மேலே போறவளே பெண்மயிலே" என்று பாடல் ஒலித்தது. நான் மிகவும் துன்பப்பட்டது அன்றுதான். சிரிக்க முடியாது திணறியது எனக்குத்தான் தெரியும்.

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவிதமாகப் பேச்சாளர்களுக்கு மரியாதை செய்வதுண்டு. சில இடங்களில் மரியாதை தேடினாலும் கிடைக்காது. மாலை, துண்டு, சட்டைத் துணி ஆகியவை மரியாதையில் அடங்கும். பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழாவிற்குச் சென்று பேசினேன். மாணவத் தலைவி பேச்சு முடிந்ததும் தட்டில் துண்டு ஒன்றினை ஏந்தி என்னிடம் கொடுக்க வந்தார். எனக்குக் குழப்பம் உண்டாயிற்று. ஏனென்றால் தட்டும புதியது. துண்டும் புதியது. எதை எடுத்துக் கொள்வது? என்று கேட்டேன். துண்டு மட்டுந்தான் உங்களுக்கு என்றார். "தட்டுக்கெட்டுப் போய்விடக்கூடாதே " என்று கேட்டேன் என்று சொல்லி சமாளித்தேன்.

பேச்சாளர்களுக்குச் சில சகுன சொற்கள் உண்டு. நீண்ட தூரத்தில் வாழும் என் மாணவ நண்பர் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிக்குச் சென்றேன். என்னை வரவேற்க இருந்த மாணவர், சொன்ன முதல்வார்த்தை, "எனக்கு என்ன செய்யறதுன்னு புரியலை" என்பதுதான்.

நான், "இந்த வார்த்தையை நிகழ்ச்சி முடிந்த பிறது சொல்லாமல் இரு" என்றேன். நிகழ்ச்சி முடிந்ததும் அதையே சொன்னார். காரணம் வசூல் செய்த பணத்தோடு வரவேண்டிய அன்பர் வரவில்லையாம். இந்நிகழ்ச்சி நடந்து ஒரு வருடம் ஆகியும் எனக்கு இன்னும் பதில் வரவில்லை. நானும் நம்பிக்கை தவறாமல் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

நான் ஒரு மேடையில் பேசுவதற்கு முன்பு அவ்வூர் பெரியவர் பேசினார். பெரியவர் என்றால், படிப்பில் இல்லை வயதில். "மாணவர்களே 7வது படிக்கும்போது 1000 குறள் தெரிந்திருக்க வேண்டும். 10வது படிக்கிறப்ப 2000 குறள் தெரிந்திருக்க வேண்டும். +2 படிக்கிறப்ப 3000 குறள் தெரிந்திருக்க வேண்டும் என்றார். குறும்புக்கார மாணவர்கள் கைகளைத் தட்டினர். பெரியவருக்கு மகிழ்ச்சி. மாணவர்கள் எதற்காகக் கைகளைத் தட்டினார்? என்று எனக்குத்தான் தெரியும். அப்பெரியவர் என்னைத் திரும்பிப் பார்த்தார். அந்தப்பார்வை நீ ஏன் கையைத் தட்டவில்லை என்பது போல் இருந்தது. உடனே நானும் கையைத் தட்டினேன். நான் அவர் காரில்தான் ஊர் திரும்பவேண்டும்.

மேடைக்கென்று சில எழுதாச் சட்டங்கள் உண்டு. பேச்சாளர் பேச்சை முடிக்க வேண்டும் என்று சொன்னால், நிகழ்ச்சி அமைப்பாளர் பேச்சாளரின் முன்நின்று கைக்கடிகாரத்தைச் சுட்டிக்காட்டுவார். அப்படியும் பேச்சாளர் புரிந்து கொள்ளவில்லையானால், துண்டுச்சீட்டில் "நேரமாகிறது முடிக்கவும்" என்று எழுதி அனுப்புவார். நான் ஒருமுறை பேசிக்கொண்டிருந்தபோது ஒரு சீட்டு என் முன்னே வைக்கப்பட்டது. சட்டென்று பேச்சை முடித்து நன்றி கூறிவிட்டேன். அமைப்பாளர், "ஏன் பேச்சை முடித்துவிட்டீர்கள்?" என்று கேட்டார். நீங்கள்தானே முடிக்கும்படி சீட்டு எழுதினீர்கள் என்று சொன்னேன். சீட்டைப் பாருங்கள் என்றார். அதில் பேச்சு சுவையாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் பேசவும் என்று எழுதியிருந்தது. துண்டுச்சீட்டுக்கு ஒரு புதிய இலக்கணம் அன்றுதான் புரிந்தது.

இரயில்வே நிலையத்தை ஒட்டிய பள்ளியின் விழாவில் கலந்து கொள்ள சென்றேன். பள்ளித் தலைமை ஆசிரியரிடம், எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்றேன். மேற்கே புகை தெரியும் வரை பேசுங்கள் என்றார். பிறகுதான் தெரிந்தது. 4–30 ரயிலுக்கு மாணவர்கள் போய்விடுவார்கள் என்று. அன்று புகையைப் பார்த்தவாறு அனல் கக்கப் பேசினேன்.

எனக்கு பாடவும் தெரியும் என்பதால் பேச்சின் நடுவே ஒருசில வரிகள் பாடுவதுண்டு. பெண்கள் கல்லூரி ஒன்றில் பேச்சின் நடுவே,

கையாலே வச்சதெல்லாம் கேசரியாம் – யானைக்
காலாட்டம் இருந்த தெல்லாம் இட்டலியாம்
கடலாட்டம் வந்ததெல்லாம் சாம்பாராம் – நம்ம
கடவுளாட்டம் போன தெல்லாம் சட்டினியாம்

என்று பாடினேன். கூட்டத்தில் இருந்த ஒரு மாணவி நான் பார்க்கும்படி கையால் தாளம் போட்டுக் கிண்டல் செய்வதாக எண்ணி செயல்பட்டார். நான் தாளம் தப்பா இருக்கும்மா என்றேன். எல்லோரும் அவரைப் பார்க்க கிண்டல் செய்யும் எண்ணம் மறைந்தது.

அனுபவங்கள் அனைத்தும் கலைகளுக்கும் உண்டு. அனுபவத்திற்கு எல்லை இல்லை. அனுபவத்தை நினைவில் கொண்டால் தொல்லை இல்லை.

❋❋❋❋❋❋❋❋❋

மகட்பாற் காஞ்சி காட்டும் மண முறைகள்

முனைவர்.கி.இராசா,
இணைப்பேராசிரியர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம்,
திருச்சிராப்பள்ளி.

புறநானூற்றில் மகட்பாற்காஞ்சித் துறையைச் சார்ந்தனவாக 20 பாடல்கள் (புற.336-354.356) காணப்படுகின்றன. இவற்றுள் 356 ஆம் பாட்டில் காடுவாழ்த்துக் குறிப்பு உள்ளது. இளம்பூரணரும் இதனைக் காடுவாழ்த்துத் துறைக்கு மேற்கோளாகக் காட்டுகிறார். இதற்குத் திணை – துறை வகுத்தோர் 'திணையும் துறையும் அவை' என்று குறிப்பிட்டுள்ளனர். 355 ஆம் பாடலின் இறுதிப்பகுதியும் திணைக் குறைப்பும் சிதைந்துள்ளன. ஆனால் இப்பாடலில் கிடைத்துள்ள முதல் மூன்றடிகளை நோக்குமிடத்து இது மகட்பாற் காஞ்சிப் பாடலென அறியலாம். எனவே புற.336 முதல் 355 வரை உள்ள 20 பாடல்களே மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் என்ற முடிவுக்கு வரலாம். இப்பாடல்களில் ஊர்வளம், தலைவி நலம், முற்றுகைத்திறம், தந்தை தமையர் மறம், தலைவியின் குடித்தனம், ஊரழிவுக்கு இரங்கும் அறம் ஆகியவை பாடப்பெற்றுள்ளன. மகட்பாற்காஞ்சிப் பாடல்களில் காணப்படும் பொதுவான கருத்துக்கள் தவிர, இப்பாடல்களின் நோக்கினைச் சுட்டும் வகையில் குறிப்பிடத்தகுந்த இருசெய்திகள் இவற்றில் காணப்படுகின்றன.

இவள் யார்?

மகள் ஒருத்தியை வேந்தன் கண்டு, அவள் மீது விருப்புக் கொண்டு "இவள் யார்?" என வினவுவதாகவும், அதற்குப் பாங்கன் அல்லது பாணன் பதிலிருப்பதாகவும் மூன்று பாடல்கள் அமைந்துள்ளன. அவை வருமாறு.

1. ஏனோர் மகள்கொல் இவள்என விதுப்புற்று
என்னொடு வினவும் வென்வேல் நெடுந்தகை

(342 : 3 – 4)

2. " ....
மாமகள் ....
... லென வினவுதி கேள்இனி"

(340 : 3 – 5)

3. "தருமமொடு இயல்வோள் சாயல் நோக்கித்
தவிர்த்த தேரை, விளர்த்த கண்ணை

வினவல் ஆனா வெல்வோர் அண்ணல்
யார்மகள் என்போய் கூறக் கேள்இனி" (353 : 4 – 7)

இவளை அடைவேன் !

மறக்குடி மகளின் குடிப்பெருமையை அறிந்து வேந்தன் இவளைப் பெண் கேட்டு அவள் குடியினரை அணுகுகின்றான். அக்கால வழக்கப்படி அவளுக்கு ஈடாகச் செல்வம் தந்து (மணவிலை) பெண் கேட்கின்றான். மறக்குடியினர் மறுக்கின்றனர். எனவே "போர் தொடுத்தேனும் அவளை அடைவேன்" என முடிவு செய்கிறான். இவ்வாறு இருவகை மணகுறைகளை – செல்வம் தந்து மணத்தல் ; போர் புரிந்து மணத்தல் – மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் விளக்குவது கவனத்திற்குரியதாகும்.

செல்வம் தந்து மறக்குடி மகளை மணம் முடிக்க வேந்தன் கருதியதும் அதற்கு அவள் வீட்டார் மறுத்ததும் பற்றிய செய்திகள் வருமாறு :

(தழும்பனது)
"உந்தை அன்ன உரைசால் நன்கலம்
கொடுப்பவும் கொளா அன்" (352 : 10 – 11)

(குட்டுவன்)
"முழங்குகடன் முழுவின் முசுறியன்ன
நனஞ்சால் விழுப் பொருள் பணிந்து கொடுப்பினும்'
(343 : 10 – 11)

"நெடுவேள் ஆதன் போந்தை யன்ன
பெருஞ்சீர் அருங் கொண்டியளே" (338 : 4 – 5)

"... ... இவள் தன்னைமாரே
செல்வம் வேண்டார் ......" (345 : 12 – 13)

இருவகை மணங்கள்

இனி, இருவகை மணமுறை நிலவிற்று என்பதற்கான சான்றுகள்:

"துறைநணி மருதத்து இறுக்கும் ஊரொடு
நிறைசால் விழுப்பொருள் தருதல் நன்றோ" 1

"புகைபடு கூர்எரி பரப்பிப் பகைசெய்து
பண்பில் ஆண்மை தருதல் ஒன்றோ" .... 2 (344 : 3 – 6)

இவனைச் செல்வம் கொடுத்துப் பெறாவிடின் போர் புரிந்தாவது பெறுவேன் என் வேந்தன் நெடுமொழி கூறியதற்கான சான்றுகள்.

"சுணங்கணி வனமுலை அவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ"
ஆரமர் உழக்கிய மறம்கிளர் முன்பின்
நீள்இலை எஃகம் மறுத்த உடம்பொடு
வாராஉலகம் புகுதல் ஒன்றெனப்
படைதொட் டனனே குரிசில் .... " (341 : 3 – 6)
"நுதிவேல் கொண்டு நுதல் வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே ... ..." (349 : 1 – 2)

வீரநிலைக்கால மணமுறை

புறநானூற்று வீரநிலைக்கால இலக்கியமாகும். வீரநிலைக்காலத்தில் அரசகுடியினர் உயர் குடியினர் – செல்வந்தர் ஆகிய இப்பிரிவினரிடையே இருவகை மணமுறைகள் வழக்கில் இருந்தன. இதனை வீரநிலைக்கால இலக்கியங்கள் ஆங்காங்கே காட்டுகின்றன. பண்டைக் கிரேக்கத்தில் மேலே குறிப்பிடப்பெற்ற புறநானூற்றுப் பாடலில் கண்டுள்ளவாறு – இருவகை மணமுறைகள் காணப்பட்டன என்று அறிகிறோம். ஒன்று, செல்வம் அல்லது அதற்கு நிகரான ஆநிரைகளைக் கொடுத்துப் பெறுவது. இரண்டு போரிட்டு அவளைப் பெறுவது.

'இந்திய வீரநிலைக்காலம்' பற்றி ஆராய்ந்த என்.கே.சித்தாந்தா, வீரநிலைக்கால மணமுறையை மூன்றாகப் பகுக்கிறார்.

(1) பெண்ணுக்கு ஈடாகப் பொருள் கொடுத்துப் பெறுதல்
(By the Payment of a price for the bride)

(2) ஆண்–பெண் இருவர் மணமும் கலப்பதால் மணம் செய்தல்
(By mutual consent of Bride and Bridgroom)

(3) போரிட்டு அவளைக் கைப்பற்றி மணம் செய்தல்
(By forcible abduction of the bride)

இன்னொரு செய்தியும் இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். பண்டை இலக்கியங்களில் களவுத் திருமணம் பற்றியே பேசும் போது இவ்வாறு பொருள் கொடுத்துப் பெண்ணை மணம் செய்து கொள்ளலும், போரிட்டுப் பெண்ணை அடைதலும் வழக்கில் இருந்தனவா எனும் ஐயம் எழுவது இயற்கையே.

அரச குடியினரும் உயர்குடியினரும் ஒன்றற்கு மேற்பட்டோரை மணந்து கொள்ளுதல் வீரநிலைக்காலத்தில் புதுவதன்று. கிரேக்க வீரநிலைக் கால இலக்கியங்களான இலியதும், ஒடிசியும் இந்திய வீரநிலைக்கால இலக்கியமான மகாபாரதமும் ஒன்றற்கு மேற்பட்ட மகளிரை மணம் செய்த தலைவர்களைக் காட்டுகின்றன. இதுபோன்றதொரு நிலை பண்டைத் தமிழக அரசகுடியினரிடம் ஆங்காங்கே காணப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உள. பேகன் – கண்ணகி மணவாழ்க்கை, காமக்கிழத்தி பற்றிய தொல்காப்பியர் குறிப்பு, ஆக இலக்கியச் சான்றுகள் ஆகியவை இதனை நிறுவுகின்றன. இதற்கு அரசியற் காரணங்கள் இருந்தன என்பதும் ஏற்புடையதாம். வேளிர் இனத்தைச் சார்ந்த அழுந்தூர் வேளின் மகளை உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி மணம் செய்தான். நாங்கூர்வேள் மகளை கரிகாலன் மணந்தான். வெளியன் வேண்மாளின் மகளான நல்லினியை உதியன் சேரலாதன் மணந்தான். ஆவக்கோமான் மகள் பதுமன்தேவியை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மணந்தான். இதுபோன்று அரசியற் காரணமாக நிகழும் மணங்கள் அக்காலத்தில் வழக்கிலிருந்தன.

கற்பனை இலக்கியமா?

மகட்பாற்காஞ்சியின் கருத்துத்தோற்றத்துக்குப் பிற காரணங்களும் கூறப்படுகின்றன.

(1) பாடல் தலைவன் இல்லாத பாடல்களாக இவை அமைந்திருப்பதால் யாரையும் சுட்டிக்கூறாது பொதுப்பட அறிவுறுத்த இப்பாடல்களைப் பாடினரோ என்று என்ன இடமேற்படுகிறது என்றும்,

(2) கொற்றவள்ளைத் துறையில் மன்னர்களைப் புகழ்ந்து பாடுதல் போல மகட்பாற்காஞ்சித்துறை இலக்கிய மரபாக மாறி மன்னர்களைப்

புகழ்ந்து பாடப் பயன்பட்டது என்றும் கருத்துக் கூறுவர். ஆனால் பொதுப்பட அறிவுறுத்தப் பாடினார்கள் என்றோ, மன்னர்களைப் புகழ்ந்து பாடும் இலக்கிய மரபு என்றோ இதனை எளிதாகக் கருதிவிட இயலாது. உண்மையில் மகட்பாற்காஞ்சி பாடல்களின் நோக்கம் என்ன என்பதை மேற்சுட்டிய விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன. மேலும் இது வேளிர்குடி போன்ற தொன்முது குடிகளிடம் வேந்தர்கள் பெண் கேட்டு வந்த உண்மை நிகழ்ச்சிகளாகவே இவை இருக்கலாம். இந்நோக்கில் ஆராய்ப்புகின் மேலும் பல சான்றுகள் கிடைக்கலாம்.

முடிவுகள் :

இவ்வாய்வின் வழி புலப்படும் உண்மைகளாகவன.

(1) மகட்பாற்காஞ்சி துறைப் பாடல்களில் முதுகுடியினர் மகளை வேந்தன் பெண்கேட்டல், அவர்கள் மறுத்தல், வேந்தன் முற்றுகையிடல் ஆகிய செய்திகள் பேசப்படுகின்றன. மேலும் இத்துறை புறப்பொருள் வெண்பா மாலையில் மகட்பாற்காஞ்சி (காஞ்சித்திணை), மகண்மறுத்து மொழிதல் (நொச்சித்திணை), மகட்பால் இகல் (உழிஞைத்திணை) ஆகிய மூன்று திணைகளையும் தழுவிச் செல்லும் துறையாக உள்ளது. இதனால் மகட்பாற்காஞ்சித் துறையிலமைந்த புறநானூற்றுப் பாடல்களுக்குக் காஞ்சித்திணை வகுக்கப்பட்டிருப்பினும் அவை நொச்சி, உழிஞை ஆகிய திணைக் கருத்துக்களையும் தழுவிச் செல்கின்றன.

(2) அரச குழுவினர் பொருள் தந்து மணம் கொண்டனர். அரசியற் காரணங்களுக்காகப் பிற குழுவினரிடம் மணவுறவு வைத்துக்கொண்டனர். பெண் குடியினர் அதற்கு இணையவில்லையெனில் படையெடுத்து மணம் கொண்டனர். பொதுவாகத் தொன்முது குடியினரான பெண் வீட்டார், வேந்தன் பொருள் பெண் கேட்க வந்தபோது மறுத்து எதிர்த்துள்ளனர்.

(3) மகட்பாற்காஞ்சிப் பாடற் கூறுகளைப் பொறுத்த வரையில் இவற்றைப் பாடிய புலவர்களிடையே பெரிதான வேற்றுமையைக் காணமுடியவில்லை. ஆனால் பரணர் பாடல்களில் வழக்கம் போல – தன் மனம் கவர்ந்த மன்னர்களை அவர்தம் நகரை – உவமையாக வைத்துப் பாடும் போக்குக் காணப்படுகிறது. அடைநெடுங்கல்வியார் பாடலில் இருவகை மணமுறை

பேசப்படுகிறது. அரிசில்கிழார் பாடலிலும் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ண பாடலிலும் "இவள் யார் என்று என்னை வினவுகின்ற வேந்தனே சொல்கிறேன் கேள்" என்று மகட்பாற்காஞ்சிக் கருத்தின் தொடக்க நிலை வெளிப்படுகிறது. கபிலர் பாடல்களில் அகுதையும் பாரியும் உவமைகளின் வாயிலாகச் சிறப்பிக்கப்படுகின்றனர். 'அவளொடு நாளை மணம் புகுவேன். அன்றேல் படையெடுத்துப் பெறுவேன்' என்று வேந்தன் வஞ்சினம் உரைத்த நிலையைப் பரணர் பாடுகிறார்.

இவ்வாறு ஒருதுறை சார்ந்த பாடல்களை அருகே வைத்து ஆராய்ந்து பார்க்கும் போது பல புதிய செய்திகள் வெளிப்பட பெருவாய்ப்பு உள்ளது என்பதை இவ்வாய்வின் வாயிலாக அறியலாம்.

குறிப்புகள் :

1. There are several ways of leading a woman into one's home. The most official way is to obtain her from her parents by offering them, in turn the hedna - which inprinciple atleast consists of a certain number of head of live stock in particular cattle. This constitute the noble marriage - However one may also obtain a woman without hedna . . . . by winning her by armed force in some warlike expedition or carrying her off in a foray or piratical raid" - myth and society in Ancient Greece - Jean Pierre Vernaut, Methuen, 1950, P.52.

2. N.K. Siddhantha, Heroic Age of India, P.149.

3. N.Mangalamurugesan, Sangam Age, P.89.

4. B.செயராமன் களம் கண்ட கருத்துக்கள், பக். 18 - 19

❋❋❋❋❋❋

க.குழந்தைவேலன்,
தொல்லியல் ஆய்வாளர்,
கல்.தொல்.முது.பட்
தமிழ்ச் சோலை,
4, திருமலை நகர் இணைப்பு,
பெருங்குடி, சென்னை - 96.

தமிழ்க் கட்டடக்கலை ஒரு நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னனியை உடையது. இன்று எழுதப்படும் கட்டடக்கலை வரலாறுகள் பெரும்பாலும் பல்லவர் காலத்திற்கு முன்பிருந்தே கட்டடங்களை இலக்கிய வாயிலாகக் கற்றுணர்ந்தும், பல்லவர் காலம் முதல் கட்டடங்களைக் காட்சி வாயிலாகக் கண்டுணாந்தும் எழுதப்படுகின்றன. பல்லவர் கால முதல் கட்டடக் கலைக்குக் கற்களாலும், செங்கற்களாலும் வெட்டப்பட்டனவும் கட்டப்பட்டனவுமான காட்சிப் பொருட்கள் மிகுதி. எனவே இக்காலக் கட்டடக் கலை மிக விரிவாக எழுதப்படுகின்றது. ஆனால் இக்காலத்திற்கு முந்தைய கட்டடங்கள் மரத்தாலும், மண்ணாலும், செங்கல்லாலும் கட்டப்பட்டுக் கால வெள்ளத்தை வென்று நிற்க இயலாதன. ஆதலால் இக்காலக் கட்டடக்கலை இலக்கியங்களைச் சான்றாகக் கொண்டு உய்த்துணர் வகையில் எழுதப்படுவதால் விரிவாக எழுதப்பட இயலவில்லை. தொல்லியல் அகழ்வாய்வுகள் ஓரளவுக்கு இவற்றிற்கு உறுதுணையாக நிற்பினும் போதிய பயன் கிட்டவில்லை.

தமிழகக் கட்டடக் கலைக்கு வரலாற்றுக்கு அழியாச் சான்றுகளாக இருப்பவை கோயில்களே. எனவே தமிழகக் கட்டடக் கலை வரலாறு பெரிதும் கோயில்களையே சார்ந்துள்ளது. இவ்வரலாற்றில் நெடிது நிலைத்து நிற்கும் பிந்தைய கற்கோயில்கள் முந்தைய மரக் (மற்றும் மண் செங்கற்கோயில்) கோயில்களின் கட்டுமான அடிப்படையில் வளர்ச்சி பெற்றவையேயாகும். கற்கோயில்கள் அமைத்த பொழுதும் பண்டைய மரக் கோயில்களைப் போன்றே சட்டங்களும் விட்டங்களும் போன்ற அமைப்புக்களைக் கல்லில் காட்டியுள்ளனர். இவற்றைப் பிற்காலச் சோழர்களின் தொடக்கக் கற்கோயில்களில் தெளிவாகக் காணலாம். கோயில்களே அன்றி கோயில்களின் விரிவாகவும், உறுப்பாகவும் அமைந்த மண்டபங்களும் பண்டைய மரக்கட்டடங்களின் வளர்ச்சியே. தொடக்க காலக் கற்கோயில்கள் உண்ணாழிகை,

முன்மண்டபம் போன்ற சில அமைப்புகளையே கொண்டிருந்தமையால் மண்டபங்களின் தொடர் வரலாற்றைக் காண்பது அரிதாக உள்ளது.

உண்ணாழிகை, முன்(முக) மண்டபங்களையும் கொண்ட சிறு கோயில்கள் பக்திப் பெருக்காலும், மக்கள் பெருக்கத்தாலும் வழிபாட்டிற்கும், வழிபாடு சார்ந்த ஆடல் பாடல்களுக்கும் ஈடு கொடுக்க இயலவில்லை. இக்கால கட்டத்தில் கோயில்கள் பல்வேறுபட்ட குமுகாயத் தேவையின் நடுநாயகமாக மாறியது. ஊரும், நாடும், நகரமும் கோயில் ஆட்சியரும் கூடி முடிவெடுக்கும் பொதுவிடமாகத் திகழ்ந்தது. பன்முகப்பட்ட இத்தேவைகளுக்காக விரிவான அகன்ற கட்டுமானப் பகுதி அல்லது கூரை இன்றியமையாது வேண்டப்பட்டது. அற்றைச் சூழலில் அத்தகைய இடமகன்ற மண்டபங்கள் எழுப்ப வாய்ப்புகள் குறைவாக இருந்தது போலும். எனவே மரக்கால்களை நட்டு கோடும், கொப்பும், இலையும் தழையும் கொண்டு அகன்ற பந்தல்களை அமைத்தனர். இப்பந்தல்கள் காவணங்கள் எனப் பொதுவாக அழைக்கப்பட்டன. [1] கோயில்களில் அமைக்கப்பட்ட காவணங்கள் திருக்காவணம் என அடை கொடுத்து அழைக்கப்பட்டது. பண்டைய இலக்கியங்கள் காவணங்களைப் பற்றி சிறிதளவே பேசுகின்றன.

கிடுகு நிரைந் தெஃகூன்றி
நடுகல்லின் அரண் போல
நெடுந்தூண்டிலிற் கால்சேர்த்திய
குறுங் கூரை. ப.பாலை : 79 - 81

என்றும்

அளைவிளை யுணவி னாய்ச்சியர் தம்மொடு
பூவ லூட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றில் –சிலம்பு – கொலைக் : 4 - 6

என வரும் அடிகளில் குறிப்பிடப்படும் பந்தல்கள் சிறுகாவணங்களே. புனை மாண் பந்தர் என்பதற்கு "அழகு பெற விட்ட குளிர்ந்த காவணத்தையுமுடைய" என உரை கூறுவார் அடியார்க்கு நல்லார்.

காவணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம்
பாரதம் / கிருட்டினர் / 56

எனப் பிறகால இலக்கியங்கள் பலவற்றுள் காவணங்கள் பேசப்படுகின்றன.

இலக்கியங்களை விட கல்வெட்டுகள் திருக்காவணங்களைப் பற்றிப் பரவலாகப் பேசுகின்றன.

கா என்ற சொல் காடு, சோலை எனப் பொருள் படும்.

அணம் என்ற சொல் மேல், உயர்வு எனப் பொருள் படும்.

எனவே கா + அணம் = காவணம். சோலை – உயிரே உள்ளது. அல்லது உயரத்தில் உள்ள சோலை எனக் கொள்ளலாம்.

கா என்பது காடு, சோலை என்பது தெளிவான பொருள்

தவள்ப பள்ளி தாழ் காவின் – கா – சோலை

என்பது ப.பாலை. 53 ; தாழ்காவின் பொருள்

அணம் என்ற சொல் மேலே, உயரே எனப் பொருள்படுவதை இலக்கிய வாயிலாக அறியலாம்.

அண் – அண – அணைத்தல்

அணைத்தல் – தலையெடுத்தல், தலையை உயர்த்திப் பார்த்தல்.

"பாம்பணந் தன்ன ஓங்கிரு மருப்பின்" பொருநர் : 13

அணத்தல் – மேல் நோக்குதல்

"நெற்கொள் நெடுவெதிர்க் கணந்த யானை" குறிஞ்சி : 35

அண – அணங்கு – அணங்குதல்

அணங்குதல் பின்னி (மேல் நோக்கி) வளர்தல்

"முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரல்" மலைபடு : 223

அண் – அண – அணம் – அண்ணம்

அண்ணம் – மேல்வாய்

"நுனிநா வண்ணம்" தொல் எழுத்து : 91

அன் – அனல் – அணர்

அணர் – மேல் நோக்கிய

"நோன்புறத் தணர்செவிக் கழுதை" பெரும்பாண் : 79

அண – அணர் – அணரி

அணரி – மேல்வாய்

"அணரியிலே கறையும்" – ஞானஉலா - 44 உரை

அணை – அணர் – அணர்ந்து – அணந்து

அணந்து – அண்ணாந்து – மேல்நோக்கி

"களிறணந் தெய்தாக் கன்முகை இதணத்து" அகம் : 308
"சுணங்கணிந் தெழிலிய வணந்தேந் தினமுலை" புறம் : 354
தலையை அடிக்கடி அண்ணத்தலால் – தலையை அடிக்கடித் தூக்குதலால் – ஓணன் அணைத்தான் என்ற காரணப் பெயர் பெற்றது (தேவநேயப் பாவாணர்)

அண் என்ற வேர்ச் சொல்லின் அடியாகத் தோன்றிய அண்ணல் எனுஞ் சொல் உயர்ந்தவன், மேலானவன், பெரியவன், தலைமையானவன், மூத்தவன், இறைவன் என்ற உயர்ந்த பண்பின் அடிப்படையாக வருதல் கண்கூடு.

எனவே அணம் என்றால் மேலுள்ளது, மேற்கூரையாக உள்ளது எனப் பொருதல் தருதல் வெளிப்படை. காவணத்தின் மேலே வேயப்படுவது கொப்பும், குழையும், இலையும், தழையுமான சோலைப் பொருள்களே. ஆதலின் கா + அணம் – சோலை மேலே உள்ள சோலை என அழைக்கப்பட்டது.

"காவணம்" – சோலை, சோலை போன்ற பந்தல்" என்பர் பாவாணர்.

அணம் + கா – அணங்கா. அணக்கா. மேலே சோலை போன்றுள்ள பந்தல் – வேலூர் மாவட்டத்தில் உள்ள சிற்றணக்காவூர் மற்றும் சென்னைக்கருகில் உள்ள அணக்கா புத்தூர் ஆகியன சோலைப்பந்தரால் பெற்ற காரணப்பெயர் போலும். இன்றும் கோயில் திருவிழாக்களில் குறிப்பாக அம்மன் கோயில் திருவிழாக்களில் இடப்படும் பந்தல் பசிய தென்னை, ஈந்து, வேம்பின் குலைகளைக் கொண்டே இடப்படுகின்றன. வேம்பின் பசிய துளிர்களால் அம்மன் கோயில்களுக்கு பந்தல் அமைப்பது வழிவழி மரபு. துளிர்களால் காவணம் அமைக்கப்படும் அம்மன் துளிர்க்காவணந்து அம்மன் என்றழைக்கப்பட்டாள். துளிர்க்காவணத்தம்மன் காலப் போக்கில் துளிர்க்காவணத்தம்மன் – துளுக்காவணத்தம்மன் – துளுக்காணத்தம்மன் என மருவி விட்டது. சென்னை, செங்கை, சித்தூர், நெல்லூர் மாவட்டங்களில் இத்தகைய துளிர்க்காவணத்தம்மன் (துளுக் காணத்தம்மன்) கோயில்களை ஏராளமாகக் காணலாம்.

தொடக்கக் காலத்தில் பசிய இலை தழைகளால் வேய்ந்து அமைக்கப்பட்ட காவணங்கள் காலப் போக்கில் கிடுகு கொண்டு

வேயப்பட்டன. கோயில்களில் அமைக்கப்பட்ட திருக்காவணங்களே பிற்காலத்தில் மண்டபங்களாக்கப்பட்டன. இன்றைய சோழர் காலக் கோயில்கள் உள்ள மா(கா) மண்டபங்கள் நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரக்கால் மண்டபங்கள் பண்டைய காவணங்களின் வளர்ச்சியே என்பதில் ஐயமில்லை. கல்வெட்டறிஞர்கள் சிலர் காவணம் என வரும் கல்வெட்டுச் சொற்களுக்கு மண்டபம் என்று தவறாகப் பொருள் கொண்டனர்.[2] ஆனால் இதனை தற்காலிகப் பந்தல் (Temporary Shed) என திரு.கே.ஆர்.சீனிவாசன் கூறுவது சற்றே பொருத்தமாகத் தோன்றுகிறது.[3] காவணங்கள் பற்றிய கல்வெட்டுச் செய்திகளால் இவை மண்டபங்கள் போல் நீண்ட காலம் நிலைக்கத் தக்கனவல்லவேனும் ஓரிரு ஆண்டுகளுக்கொரு முறை புதுப்பிக்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டனவாகவே உணர வைக்கின்றன.

பொருளியல் காரணங்களாலும், பிற காரணங்களாலும் சோழர் காலத்தும் பிற்காலத்தும் பெருங்கோயில்கள் பலவற்றில் திருக்காவணங்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன என்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இதுவரை அறியப்பட்ட காவணங்களில் மிகத் தொன்மையானது திருவள்ளுவர் மாவட்டம் பொன்னேரி வட்டம் சின்னக்காவணம் என்ற ஊரில் இருந்த திருக்காவணம் ஆகும். சின்னக் காவணத்தில் பல்லவர் காலக் கோயில் ஒன்று இருந்து அழிந்துவிட்டது. அதன் எச்சங்களாக சில மணற் கல்லாலான சிதைந்த சிலைகளும் இன்றைய செங்கல்லாலான சிவன் கோயிலில் உள்ள திருக்காவணக் கல்வெட்டும் சான்றாக உள்ளன. இக்கல்வெட்டில் பல்லவ அரசன் நந்திவர்மன் காலத்தில் திருக்காவணம் ஒன்று அமைக்கப்பட்ட செய்தி தமிழும் பல்லவ கிரந்தமும் கலந்த எழுத்தில் கூறப்பட்டுள்ளது.[4]

திருக்காவணங்கள் பல்லவர் கால முதல், நாயக்கர் காலம் வரை நெல்லூர் முதல் குமரி வரி பரவலாக இருந்துள்ளன. தமிழின் இழந்த மண்ணின் ஒரு பகுதியான நெல்லூர் மாவட்டத்தில் உள்ளது. கிருட்டினப்பட்டினம் இதன் பழம் பெயர் கொல்லித்துறை. சக ஆண்டு 1201 இல் (கியீப.1279) இருமுடி காளத்தி தேவனுடைய ஆட்சியில் நாடுகள் நகரங்கள் மலைகள் ஐந்து மண்டபங்களின் தலைவர்களும் உள் நாட்டு, வெளிநாட்டு வணிர்களும் கொள்ளித்துறையான கண்டகோபாலப் பட்டினத்து மனும சித்தேசுவரர் கோயில்

திருக்காவணத்தில் கூடியிருந்து இக்கோயில் பூசை, திருப்பணிகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி சரக்குகளுக்கு 1/2 விழுக்காடு இறையளிக்க முடிவெடுத்தனர். அந்நூற்றவன் இதே ஊரின் வேறிந் கல்வெட்டுக்களில் தேசிநாயகன் திருக்கவணமும் [6] திருக்காவணமும் [7] குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் பதினென் பூமி சமத்த பரதேசிகளும், மலை மண்டலத்தாரும் கூடி பல முடிவுகள் எடுத்தலைதக் குறிக்கிறது.

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள சிற்றீங்கூர் (சித்தலிங்கமடம்) திருப்புலிபகவர் கோயிலில் "பொந் வாசி கொண்டான் திருக்காவணம்" என்றொரு திருக்காவணம் இருந்துள்ளது.[8] இக்காவணத்தில் இக்கோயில் சிரிமாயேசுவரரும், தாநிகரும், கைக்கோளரும் நிறைவேற நிறைந்து குறைவேறக் கூடி இருந்து கோயில் தொடர்பான முடிவுகளை மேற்கொண்டனர் என அவ்வூர்க் கல்வெட்டு கூறுகிறது.

நாகை மாவட்டம் திருவாரூர் திருவாரூடையார் கோயிலில் தேசி நாயகன் திருக்காவணம் என்றொரு திருக்காவணம் இருந்துள்ளது. இத்திருக்காவணத்திலே முதலாம் குலோத்துங்கன் காலத்தில் புக்கதுறைவல்ல தலைக்கோலி என்பவரும், விக்கிரம சோழன் காலத்தில் பதியிலான் தியாக விநோத தலைக்கோலி என்பவளும் நாட்டியம் ஆடினர். இதனை திருவாரூர் உடையார் வீதிவிடங்கதேவர் கண்டருளினார் எனத் திருவாரூர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.[9]

இதே போன்று பண்டைய பெருங்கோயில்கள் பலவற்றில் திருக்காவணங்கள் இருந்ததை திருவிசலூர், திருவிடைமருதூர் கல்லிடைக்குறிச்சி திருக்கழுக்குன்றம் முதலான பல ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளால் அறிய வருகின்றன. இத்தகைய காவணங்கள் எப்படி இருந்தன என்பதற்கு நேரில் காண சான்றுகள் நமக்கு இன்று கிடைக்கவில்லை. இன்று தில்லைத் திருக்கோயிலின் (சிதம்பரம்) மூன்றாம் திருச்சுற்றின் கிழக்குப் பக்கத்தில் ஆயிரக்கால் மண்டபத்தின் எதிரில் கற்தூண்கள் வரிசையாக நாட்டப்பட்டுள்ளன. ஆனி மற்றும் மார்கழித் திருவிழாக்காலங்களில் அவற்றின் மீது கிடுகுகள் வேயப்பட்டு ஆடல்வல்லான் ஆடல் காட்சியளிப்பதைக் காணலாம். இது பண்டைய காவணத்தின் எச்சமே என்பது தெளிவான ஒன்று.[10] காவணத்திற்கான ஒரே காட்சிப்பொருளும் இதுவே.

ஊர்கள் தோறும், ஊர், நாடு, நகரம், சபை கூடி பேசுதற்கு ஏற்ற மண்டபங்களாகவும், விழக்காலங்களில் ஆடரங்குகளாகவும் நாடக சாலைகளாகவும் பிறவாறும் பயன்பட்டு வந்த திருக்காவணங்கள் பல பெருமண்டபங்களின் தோற்றத்தில் மாற்றமடைந்துவிட்டன. இன்னும் பல கால வளர்ச்சியில் கோயிலின் செல்வர்க்கு இழப்பால் புதுப்பிக்கப்படாமல் அழிந்துவிட்டன.

ஊர் தோறும் மாமண்டபங்களின் முன்னோடியாக இருந்து மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்த காவணங்கள் இன்று வழக்கிழந்துவிட்டன. மாநாடுகள், விழக்கள் ஆகியவற்றிற்கு பரந்த அளவில் கிடுகு (கீற்று)களைக் கொண்டு இன்று காவணங்கள் அமைக்கப்பட்டாலும் அவை காவணம் என்ற தன் பெயரை இழந்துவிட்டன. கல்வெட்டுக்களே காவணத்தையும், காவணம் என்ற தமிழ்ச்சொல்லையும் காத்து வருகின்றன.

தற்காலத்தில் அவசரத் தேவைகள் மற்றும் ஒரு சில நாள் தேவைகளுக்காக துணி மேற்கட்டிகள் (Sameana) எளிமையாகக் கிடைப்பதாலும், ஒரு சில மணித்துளிகளில் அமைத்தலும் பிரித்தலும் முடிந்திடுவதாலும் ; நிலையான் திருமண மண்டபங்கள், அரங்குகள், விழா மன்றங்கள் வாடகைக்கு எளிதில் கிடைப்பதாலும் காவணங்களின் தேவை குறைந்து விட்டது.

1. செட்டி நாட்டில் இன்றும் காவணம் என்ற வழக்குள்ளதாக அறியப்படுகிறது.
2. சேதுராமன் நா. “கடவுளின் கல்வெட்டு” ‘ஞானசம்பந்தம்’ மாத இதழ் 45 : 7 : 10.8.86.
3. தென்னிந்திய கல்வெட்டு தொகுதி 26 : 417, ஆங்கிலக் குறிப்புரை
4. இக்கல்வெட்டு கட்டுரை ஆசிரியால் 1995 ஆம் ஆண்டு இறுதியில் நேரில் சென்று பார்வைப்படி எடுக்கப்பட்டது. சின்னக் காவணம் என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலின் மும்மண்டப வெளிப்புற உட்சுவரில் இக்கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது.

5,6,7. நெல்லூர்க் கல்வெட்டுகள் 196, க.ஆ.அ.78 / 63, 64.

8. தென்னிந்திய கல்வெட்டுக்கள் 26 : 417

9. தென்னிந்திய கல்வெட்டுக்கள் 5 : 456, 17 : 593

10. சில ஆண்டுகளுக்கு முன் இக்கற்றூண்களின் மீது கற்காரையால் தளம் அமைக்கப்பட்டு திருக்காவணத்திற்குச் சான்றாக இருந்த ஒரே ஒரு சான்றும் மறைக்கப்பட்டுவிட்டது.

பதிப்பாசிரியர் குறிப்பு

காவணம் என்னும் தொகைச் சொல்லைக் கா+அணம் எனப் பிரித்துச் சோலை உயரே உள்ளது (சோலையாக அமைந்தது) எனப் பொருள் கொள்ளலாம் என்பது கட்டுரையாளர் கருத்து – கா + வண்ணம் = தன்மை – நிலை, சோலையின் தன்மையது – சோலைக் கொப்பானது எனக் கோடன் தெளிவானது பாவணரும் சோலை போன்றபந்தல் என்றே விளக்கங் காண்கிறார். அண் – என்னும் முதனிலை உரிச்சொல் மேலிடம் (அண்ணம்) மேலோங்கல் (அண்ணாத்தல்) பக்கம் (அண்மை) நெருக்கம் (அணுக்கம்) முன்னையது (அண்ணன்) தலைமை (அண்ணல்) எனப்பலபொருளில் வரும். கட்டுரையாளர் மேலெழுதல் என்னும் பொருளைக் கொண்டுள்ளார். சிற்றணக்காவூர் என்பதற்கு சோலைகள் அணுகிய சிற்றூர் என்றும் அணக்காபுத்தூர் என்பதற்கு சோலைகள் அணுகிய புதிய ஊர் என்றும் பொருள் காணலாம். பந்தல் என்பது பந்தர் என்றும் சொல்லின் இறுதிப் போலி. இதற்கு மேலாகக் கட்டப்பட்டது. (பந்தம் – கட்டு) எனப் பொருள் காண்பார் சிலர். பந்தி என்பதற்கு வரிசை நிரல் என்பது பொருள். (பந்து + இ – பந்தி) இதன் முதனிலைச் சொல் பந்த் ஆர் என்பதன் குறுக்கமாகிய ஆர் விகுதி பெற்றுப் பந்தர் என ஆக்கம் பெற்றதாகும். மண்டபம் என்பது மண்டகம் (மண்டு + அகம்) என்பதன் திரிபாகும் மேல்வளைத்துக் கட்டப்பட்ட இடத்தைக் குறிக்கும். துளிர்க்காவணத்தம் மன் என்பது துளுக்காணத்தம் மன் என மருவியதாகலாம் என்னும் கருத்து ஆய்வுக்குரியதாகும்.

****

கிருட்டின எசுர் வேதத்தின் நோக்கங்கள்

முனைவர்.க.சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்,
சென்னை – 5.

'வேதம்' என்றால், என்னவோ ஏதோ என்று தமிழ்;ப்படித்தோர் மயங்கும் நிலை உள்ளது.

இயற்கையின் மாட்டும், கடவுள் மாட்டும கோரிக்கைகள் விடுத்தலும், அவற்றுக்கான சடங்குகளுமே வேதம் என்று சுருங்க உரைக்கலாம்.

எசுர் வேதத்தின் ஒரு பிரிவான கிருட்டிண எசுர் வேதத்தின் நோக்கங்கள் மட்டும் இங்கு காணப்படுகின்றன.

கிருட்டிண எசுர் வேதிகள் என்போர் தமிழகத்தில் பரம்பரை பரம்பரையாக இருந்து வருவோர் என்பதும் இங்கு குறிக்கற்பாலது.

எசுர் வேதத்தின் ஒரு பகுதி சுக்கில எசுர் வேதம் (சுக்கிலம் – வெள்ளை) எனப்படும். மறுபகுதி கிருட்டிண எசுர் வேதம் (கிருட்டிணம் – கருப்பு) எனப்படும்.

கீழே வருவன, கிருட்டிண எசுர் வேதத்தில் உள்ள எசுகள் குறிக்கும் நோக்கங்களாம்.

1. "எங்களுக்கு நீண்ட ஆயுள் தரவேண்டும்"
2. "நாங்கள் போரில் வெல்ல வேண்டும்"
3. "எங்களுக்குச் செல்வம் பெருக வேண்டும்"
4. "நாங்கள் புகழ் அடைய வேண்டும்"
5. "நாங்கள் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப்படவேண்டும்"
6. "எங்கள் துன்பங்களை குறைக்க உதவ வேண்டும்"
7. "இராட்சசர்களை அழிக்க வேண்டும்"
8. "அக்கினி, வருணன், வாயு, பூசன், பிரசாபதி, துவஷ்டா, ஆதித்தன் முதலிய கடவுளர்க்கு வணக்கம் கூறுகிறோம்."

9. "நரிகளிடமிருந்து பாதுகாப்பு வேண்டும்"
10. "திருடர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும்"
11. "பாவங்கள் நெருங்காவண்ணம் காப்பாற்றுக"
12. "உணவில் விடம் இலாது அருள்புரிக"
13. "மழை பொழிய வேண்டும்"
14. "மழையால் அழிவு வராமல் காக்க"
15. "எங்கள் கால்நடைகளைக் காப்பாற்ற வேண்டும்"
16. "எங்கள் குழந்தைகளுக்குக் கேடு வரக்கூடாது"
17. "எங்கள் குதிரைகளுக்குத் துன்பம் வரக்கூடாது"
18. "நாங்கள் செய்த பாவங்களுக்காக, எங்களை வதைத்து விடாதீர்"
19. "என்னோடு ஒத்தவர்கள் நடவே, என்னை உயர்ந்தவனாக்கு"
20. "எங்கள் உணவை இனிமை உள்ளதாக ஆக்குக".

கிருட்டின எசுர் வேதத்தில் பதிந்துள்ள இந்த நோக்கங்கள் பல்வேறு மேலாய்வுகளுக்கு வாய்ப்பளிக்கவல்லன.

மேல், கோரிக்கைகளில், குழுவுக்காகக் கோருவதையும், தனிமனிதனுக்காக வேண்டுவதையும் நாம் காணமுடிகிறது.

அந்நாள் மக்களின் (கி.மு.2000) சமுதாயப் பாதுகாப்பற்ற (Social insecurity) ஒரு நிலையையும் நாம் அறிகிறோம்.

அச்சமுதாயம் என்பது, மனைவி மக்களுடன், குடும்பமாக இருந்து, செல்வம் சேர்த்து, வாழ்ந்த வாழ்க்கை முறையைக் கொண்டது என்ற உண்மையும் துலக்கமாகிறது.

மேலும், ஒருவரைஒருவர் அடுதலும் தொலைதலும் பழக்கமாக இருந்துஒரு போர்ச் சூழலும் அந்நாளில் இருந்தது என்ற மெய்ம்மையும் பெறப்படுகிறது.

இவ்வாறு, கிருட்டின எசுர்வேத ஆய்வானது நமக்குப் பல தெளிவுகளை நல்கவல்லதாக உள்ளது.

திருவள்ளுவர் ஒரு சட்ட மேதை

வி.கார்த்திகேயன், B.Sc., M.A., C.Lib.Sc., C.V.G.,

செய்தக்க அல்ல செயக்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானும் கெடும் (திருக்குறள். 466)

மேலே கண்ட திருக்குறள் நம் நாட்டின் சட்ட திட்டத்திற்கு மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்து நாட்டின் சட்ட திட்டங்களுக்கும் மிக பொருத்தமாகவே உள்ளது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தானொரு சட்ட மேதையாக நின்று உலக சட்ட திட்டங்களுக்கெல்லாம் பொருந்துமாறு நுணுக்கமாக சிந்தித்துணர்ந்து இரண்டடிக்கு மிகவும் குறுகிய அளிவிலே இயற்றி உலகத்திற்கே பொதுமறையாக அளித்துள்ளார். அவருடைய நுணுக்கமான அறிவை என்னவென்று பாராட்டுவது. எனவே உலகத்தார் திருக்குறளை புறக்கணிக்காமல் சாதி, மதம், இனம், மொழி என்ற பாகுபாடுகளை தூக்கியெறிந்து திருக்குறள் ஆராய்ச்சியில் ஈடுபட்டவண்ணம் உள்ளனர்.

இப்பேரண்டத்திற்கு எப்படி எல்லையில்லையோ அதுபோலவே திருக்குறளின் ஆழ்ந்த கருத்துச் செறிவுக்கு என்றுமே எல்லையில்லை. அவற்றை நுணுக்கமாக ஆராய ஆராய கடலிலுள்ள செல்வத்தைப் போல் குறைவில்லாமல் கொடுத்துக் கொண்டேயிருக்கும். கல்விக்கு கரையில்லை என்று குறிப்பிடுவது போல திருக்குறளின் செழுமைக்கு என்றுமே கரையில்லை. "உன் நண்பனை பற்றி நீ கூறு உன்னைப் பற்றி நான் கூறுகிறேன்" என்ற அழகான மறைமொழி போல மேலே கண்ட ஒரு திருக்குறளே போதும் பிற திருக்குறள்கள் எத்தன்மையுடன் விளங்கும் என்பதற்கு

"**செய்தக்க அல்ல செயக்கெடும்**" என்ற முதலடியின் பொருள் என்னவென்று நம்மனைவருக்கும் மிகவும் நன்றாகவே புரிந்திருக்கும். செய்யக் கூடாதவை என்று ஒதுக்கித்தள்ளப்பட்ட செயல்களை செய்வதால் தீமைதான் விளையும் என்பதே அதன் உட்பொருளாகும். அதாவது மக்களை நல்வழிப்படுத்த ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் சில

விதிமுறைகளை வரையறுத்து செயல்படுகின்றன. அவ்விதிமுறைகளை மீறி ஒருவர் செயற்படுவாரேயானால் அவரை தண்டிக்க சட்டம் தன் கடமையை செய்யத் தொடங்கும். இங்கு திருக்குறளின் (466) சட்ட நெறி போக்குவரத்திலும் பிற பணியிலும் எவ்வாறு பின்பற்றப்படுகின்றன என்பதை சில எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

சாலை போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் நெரிசலை குறைக்கவும் சாலை சந்திப்புக்களில் சமிக்கை விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் சிவப்பு, மஞ்சள், பச்சை என நிறங்கள் மாறி மாறி ஒளிர்வதை பொறுத்து அவரவர் தங்கள் பாதையில் செல்லவோ அல்லது நிறுத்தவோ வேண்டும். போக்குவரத்து விதிப்படி சிவப்பு விளக்கு நின்றெறியும் போது அதை பொருட்படுத்தாமல் அப்பாதைக்குரியோர் பயணத்தை தொடர்ந்தாரானால் அப்போது அவரை தண்டிக்க போக்குவரத்து சட்டம் முன் வருகிறது. செய்யக் கூடாதவை என்று ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்களை செய்ததால் சட்டம் அதற்குரிய தண்டனையை வழங்குகிறது. இது போலவே நிறுத்து கோட்டை தாண்டி நிறுத்தினாலோ (STOPLINE), ஒரு வழிப்பாதை (NO ENTRY) என்று அறிவிக்கப்பட்ட சாலையில் பயணம் செய்தோமானால் அங்கு நம்மை தண்டிக்க சட்டம் இடம் தருகிறது.

சிறுநீர் மற்றும் மலம் கழிக்க கூடாது என்று விளம்பரப்படுத்தப்பட்ட இடத்தில் சிறுநீரோ, மலமோ, கழித்தால் அங்கு தவறு செய்தவர்களை தண்டிக்க சட்டம் இடம் தருகிறது. "தூய்மையான பகுதி அசுத்தம் செய்யாதீர்கள்" (LITTER FREE ZONE) என்று குறிப்பிடப்பட்ட பகுதியில் அசுத்தம் செய்ய புறப்பட்டால் அங்கு சட்டம் தான் யாரென்று நிருபிக்கிறது. அதுபோலவே "சுவரொட்டிகளை ஒட்டாதீர்கள் மீறினால் தண்டிக்கப்படுவீர்" என்று எழுதப்பட்ட சுவற்றிலே மீறி சுவரொட்டிகளை ஒருவர் ஒட்டுவாரானால் அவரை தண்டிக்க சட்டம் இடம் தருகிறது.

அரசு மற்றும் இராணுவ கட்டிடங்கள், இராணுவ பயிற்சி முகாம் இவற்றின் அருகிலே சென்று கண்டோமானால் அது பொதுமக்கள்

தவிர்க்க வேண்டிய பகுதி என்றும் "புகைப்படங்கள் எடுக்க கூடாது" என்றும் எழுதப்பட்டிருக்கும். இங்கு எவரேனும் மீறி நுழைவார்களானால், புகைபடம் எடுக்க முயற்சி செய்வார்களானால் அவர்களை தேச துரோகச் செயல்களில் அதாவது உளவு பார்த்தவராக கருதி உடனே கைது செய்து தண்டனை வழங்கவும் சட்டம் இடம் தருகிறது. போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாமல் தடுக்க ஒரு சில சாலைகளை "வாகனங்கள் இங்குநிறுத்த தடை செய்யப்பட்டது" (NO PARKING AREA) என்று சாலையோரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். இதை கண்டோ காணாமலோ ஒருவர் வாகனங்களை நிறுத்தி செல்வாரானால் வண்டியை உடனடியாக போக்குவரத்து காவலர் அங்கிருந்து அப்புறப்படுத்தவும் அவர் மீது அபராதத் தொகை பெறவும் சட்டம் வழிவகை செய்துள்ளது. இதே போல கொலை, கொள்ளை, கற்பழிப்பு, திருட்டு, போதை மருந்து மற்றும் ஆயுதம் கடத்தல் இன்னும் பிற குற்றங்களை செய்யாதே என்று சட்டங்கள் அறிவுறுத்தி நிற்க சட்டத்தை மீறி குற்றங்கள் இழைப்பவர்களை தண்டிக்க சட்டம் இடம் தருகிறது. இவற்றையே திருவள்ளுவர் சுருக்கமாக "செய்தக்க அல்ல செயக்கெடும்" என்று ஒரே அடியில் அழகாக கூறி மக்களை விழிப்படைய செய்துள்ளார்.

எவையெவை செய்ய வேண்டும் என்பதையும் அவற்றை செய்யாமல் தவறுவதால் என்னவென்ன விளையும் என்பதை "செய்தக்க செய்யாமை யானும் கெடும்" என்று இரண்டாவது அடியில் கூறியுள்ளார். இதனை விளக்க சில உதாரணங்களை கூற இங்கு விழையலாம். சாலையில் செல்லும் இரு சக்கர வாகனவோட்டிகள் தலை கவசம் அணிந்து செல்ல வேண்டும் என்று சட்டம் எடுத்து கூற, அதை புறக்கணித்து செல்வது இருசக்கர வாகனவோட்டிகளுக்கு பாதுகாப்பின்மை ஏற்படுவதோடு சட்டமும் தண்டிக்க வழியை ஏற்படுத்தும். பேருந்துகளின் படிக்கட்டுகளில் நின்றோ தொங்கியோ பயணம் செய்வதை தவிருங்கள் என்று சட்டம் பயணிகளுக்கு அறிவுரை வழங்குவதோடு அதை புறக்கணிப்பவருக்கு அபராதமும் வழங்குகிறது.

இரயில் நிலையங்களில் தண்டவாளத்தை கடப்பது ஆபத்தை விளைவிக்கும் என்பதற்காக சுரங்கபாதையும், பாலமும் அமைத்து இருக்க இரயில் பயணிகள் இவற்றில் ஏறி செல்ல சோம்பல் பட்டு சுருக்க வழியாக தண்டவாளத்தை கடப்பார்கள். இங்கு தண்டவாளத்தை கடந்த குற்றத்திற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் இடமளிக்கிறது. ஆழ் கடல் சென்று மீன்பிடிப்பவர்கள் தவறுதலாக சர்வதேச எல்லையை கடந்து பிற நாட்டின் கடலெல்லைக்குள் நுழைந்து மீன் பிடித்தார்களானால் அவர்களை அத்துமீறி நுழைய முற்பட்டவராகவும் உளவு வேலையில் ஈடுபட்டவராகவும் கருதி கைது செய்து சிறைத்தள்ள அந்நாட்டிற்கு முழு உரிமையை சட்டம் அளிக்கிறது. இதே போலவே ஆகாய மார்கங்களை பயன்படுத்தும் போது அந்நிய நாட்டு பயணிகள் விமாணம் நம் நாட்டை கடந்து வேறொரு நாட்டிற்கு செல்லும் போது அவற்றிற்குரிய பாதையிலே குறிப்பிட்ட உயரத்திற்கு மேலாகவே பறந்து செல்ல வேண்டும். சிறிது பாதை மாறியோ அல்லது தாழ்வாக பறந்தாலோ அவ்விமானங்களை இடைமறித்து இறக்கி விசாரனை செய்ய சர்வதேச சட்டம் இடமளிக்கிறது. இவற்றிலிருந்து செய்ய கூடியவை என்று வலியுறுத்தி கூறப்பட்டவற்றை செய்யாமல் தவறுவதால் என்ன தீமைகள் விளையக் கூடும் என்பதை திருக்குறள் மிக அழகாக "செய்தக்க செய்யாமை யானும் கெடும்" என்று ஏழு வார்த்தைக்குள் அடக்கி கூறியுள்ளார். இத்தகைய சட்ட அறிவாளரை சட்ட மேதை என்று புகழ்ந்தாலும் மிகையல்ல. இதே அடிப்படை உண்மையை ஆதாரமாக கொண்டே அனைத்து சட்டங்களும், சட்ட உள்பிரிவுகளும் ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய அறிவாளரை சட்ட மேதை என்று அழைத்தாலும் அது மிகையாகாது.

▲❄❄▲❄❄▲❄❄▲

சென்ற இதழ் தொடர்ச்சி :-

மேலாண்மை பொன்னுச்சாமியின் நாவல்களில் கலையும், கருத்தும்

முனைவர்.தெ.திருஞானமூர்த்தி,
விரிவுரையாளர்,
க.செ.கல்லூரி,
மேலைச்சிவபுரி.

"ச்சே . . . . . . சம்சாரி காட்லே இருந்த பாடுபட விடாம . . . . கரண்டாபீஸிக்கும் உரக்கடைக்கும் அலைய வைச்சுட்டாங்களே" (ப.94) என்ற ஜம்புலிங்கத்தின் பேச்சு இயல்பானதாக உள்ளது. ஆனால் "சம்சாரியோ சமுத்திரமோ" என்று பழமொழி. சமுத்திரத்தில் தலா போட்டுவிட்டால் நிரந்தரமாய் இறைத்துக்கொண்டேயிருக்கலாம் என்று நகரத்துச் சீமான்கள் நாக்கில் எச்சில் ஒழுகக் கணக்குப் போட்டார்கள். அந்தக் கணக்கில் வந்து சேர்ந்தது பசுமைப்புரட்சி. உற்பத்தியை பெருக்க முற்போக்கு விவசாயம் என்ற கவர்ச்சியான கோஷம் (ப.107) என்ற ஜம்புலிங்கத்தின் நினைவுகள் எதார்த்தமானதாக இல்லை. ஓர் இயக்கத்தில் கொள்கையை ஜம்புலிங்கம் என்ற கிராமத்து விவசாயியின் மேல் ஏற்றிப் பார்த்திருப்பது குருவித் தலையில் பனங்காயை வைத்ததுபோல் உள்ளது. இச்சிந்தனை ஜம்புலிங்கத்திற்கு இல்லை என்றாலும் அப்பாத்திரத்தை நாம் எளிதில் மறந்துவிட முடியாது. ஏனெனில் அதுதான் நம் முன்னோரின் வாழ்க்கையாக இருந்திருக்கிறது.

பூங்கிளி பாத்திரம் ஓர் முற்போக்கான பாத்திரமாகும். ஏனெனில் வெடிப்புறப் பேசு எனக் கவிதை எழுதிய வசந்தனைப்பற்றி பூங்கிளி இவன் நம்மைப் பேசச் சொல்லிவிட்டு அப்பாவின் கைத்தடியாய்த் திரிகிறான் என எண்ணுகிறாள். கட்டயச் சீர்முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் பூங்கிளி வசந்தனைத் தான் மணப்பேன் என்று கூறியிருந்தால் அது இயல்பானதாக இருந்திருக்கும். மீண்டும் அவள் ஓர் அழைப்பைப் பொதுமையாய் முன் வைப்பது, அப்போது வந்து வசந்தன் அவளை ஏற்பது என்பதில் திரைப்படப்பாணியே வெளிப்படுகிறது. இதில் எதார்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

முற்றுகை, இனி அச்சமே நரகம் ஆகிய மூன்று நாவல்களும் இதழ்களில் வெளிவந்தவையாகும். இதனால் இந்நாவல்கள் எளிமையோடும் ஒரு பொதுத்தமிழ் நடையோடும் திகழ்கின்றன. கல்கி இதழின் பரிசுப் போட்டிக்கு முற்றுகை எழுதப்பட்டிருக்கிறது. இதனால் தம் கருத்துக்கு ஏற்ப சொர்ணத்தைத் திட்டமிட்டுப் படைத்துள்ளார். 'இனி' நாவல் செம்மலரில் வந்தமையால் அதன் தரம் மிகுதியும் காப்பாற்றப்பட்டிருக்கிறது. வெகுசனப்பத்திரிக்கையான ஆனந்த விகடனில் அச்சமே நரகம்

வெளிவந்தமையால் அதன் முடிவு திரைப்படப் பாணியை அடியொற்றி அமைந்திருக்கிறது எனக் கருதவேண்டியிருக்கிறது. இவர்தம் பாத்திரங்களுள் சொர்ணம், ஜம்புலிங்கம், பூங்கிளி ஆகிய பாத்திரங்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பழநியும் வசந்தனும் பாத்திரப் படைப்பில் ஒன்று போலவே திகழ்கிறார்கள். நெறிக்காகப் படைக்கப்பட்ட கற்பனைப் பாத்திரங்கள் என்றும் இவர்களைச் சுட்டலாம். மேலாண்மையின் கதை மாந்தர்களுள் ஜம்புலிங்கம் நம் வரலாற்றுக் களஞ்சியமாய் நிற்கும் தகுதிப்பாட்டிற்கு உரியவர். மேலாண்மை என்றதுமே எனக்கு ஜம்புலிங்கம்தான் நினைவுக்கு வருகிறார். அந்த அளவிற்கு உயிர்பான பாத்திரமாக ஜம்புலிங்கம் பாத்திரம் திகழ்கிறது.

மேலாண்மையின் வட்டாரப் பாங்கான உவமைகள் நாவலின் கலைத்தன்மையை மிகுதிப்படுத்தியிருக்கின்றன. நனைந்த நிலமாய்க் குழைகிற நினைவுகள், கொத்திக் கண்ட கோழியும் நக்கிக் கண்ட நாயும் சும்மாயிருக்காதும்பாக. அப்படித்தான் ஒழைச்சுப் பழகிப்போன ஒடம்பும் என்ற பேச்சுக்கள் மண்ணின் தன்மையை அப்படியே மனத்தில் இருத்துகின்றன. சமூக உணர்வுமிக்க இவர் தம் எழுத்துக்கள் வாழ்வின் அவலத்தை நம் கண்முன் நிறுத்துகின்றன. "முள்ளுப் புதருக்குள் காயம்பட்டு விழுந்த பறவையைப் போல நாலு திசைகளிலும் முள்முள்ளாய்க் குத்திக் கிழிக்கிற வாழ்க்கை" என்ற இவர் தம் நடை நாவலுக்கு மேலும் கலைத்தன்மையை வழங்கியிருக்கிறது. மெய்மை, எதார்த்தம், வாழ்க்கைக் கண்ணோட்டம், ஆளுமை மிக்க நடை இவர்தம் சிறப்புக்கள். இயக்கத்தின் கொள்கைகளுக்காக கதையை விரிவுபடுத்தி எழுதுதல், பாத்திரச் சித்திரிப்பு முதலியவை இவர்தம் பலவீனங்கள்.

முடிவுகள் :

முற்றுகை, இனி, அச்சமே நரகம் என்ற மூன்று நாவல்களும்மே விவசாயத்திற்கு ஏற்பட்டு வரும் நெருக்கடியைப் பேசி நிற்கின்றன.

பெண்ணியம், தலித்தியம், தேசியம் ஆகியவற்றை வாழ்க்கை என்ற வட்டத்தின் பகுதிகளாகக் கொண்டு தம் படைப்பைப் படைத்துள்ளார் மேலாண்மை.

நடப்பு மார்க்சியர்களின் இலக்கியக் கண்ணோட்டம் ஜம்புலிங்கம், சொர்ணம், வசந்தன் காதல் ஆகிய மூன்றிலுமே பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்பாதிப்பு பாத்திரங்களின் மெய்மைத் தன்மையைப் பாதித்திருக்கிறது. மேலாண்மையின் பாத்திரங்களுள் ஜம்புலிங்கம் இமயம்போல் நம் நெஞ்சில் தனித்து நிற்கின்றார்.

ஆசிரியரின் அனுபவமும் கருத்தாழமும் மிக்க நடை நாவலின் கலைத்தன்மை மேம்படுத்தியிருக்கிறது.

******

நூல் திறனாய்வு

முனைவர்.த.மலர்க்கொடி, எம்.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.,
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை,
த.உ.க.கலைக் கல்லூரி,
தஞ்சாவூர் – 2.

நூலின் பெயர்	:	இது என் வாழ்க்கைக் கதை
ஆசிரியர்	:	அன்னை வீரம்மாள்
வெளியீடு	:	அன்னை ஆசிரமம் திருச்சிராப்பள்ளி
விலை	:	ரூபாய் 75

சமூக மக்களின் பயன்பாட்டிற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு எதிர்காலச் சமுதாயத்திற்கு வழிகாட்டியாய் அமையும். அந்த வகையில் அன்னை வீரம்மாள் என்பவர் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை 'இது என் வாழ்க்கைக் கதை' என்ற நூலின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார். இந்நூலைத் திருச்சிராப்பள்ளியிலுள்ள அன்னை ஆசிரமம் வெளியிட்டுள்ளது.

தனிமனிதரின் வாழ்க்கை வரலாறு இலக்கியமாய் நிலைத்து நின்று பெண்ணினத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்று அவர் உறுதியாக நம்புகின்றார். அன்னை வீரம்மாள் வேறொரு பெண்ணின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதைப் போலத் தம்முடைய வாழ்க்கை வரலாற்றைப் பிறந்த ஊரும் பிறப்பின் வரலாறும், பெற்றோரும் குடும்பமும், குழந்தைப் பருவத்தில், ஒரே ஒரு பெண் குழந்தை பள்ளியில், நடுநிலைப்பள்ளியில் இருந்து உயர்நிலைப் பள்ளிவரை, திருமண நிச்சயதாம்பூலம், பள்ளிப்பாதைகளில் பூக்களும் தடைகளும், மனதை மாற்ற முயற்சி, திருமணம், கணவனின் குணத்தைக் கண்டு கலங்குதலும் குடும்பப்பாரமும் . . . . . என்று இவ்வாறு நாற்பது பிரிவுகளில் எழுதியிருக்கிறார். ஒரு மூன்றாம் மனிதராக நின்று கொண்டு தம்மைத்தாமே திறனாய்வு செய்து கொள்ளும் போது தம்முடைய பலம் எது? பலவீனம் எது? என்பது புலப்படும். அவ்வாறு தம்மை உணர்ந்தவர்கள் அறிவாளிகளாகக் கருதப்பெறுவர். அந்தவகையில் அன்னை வீரம்மாள் மிகசிறந்த அறிவாளி ; பொருக்கேற்றவாறு போராடும் கொண்ட வீராங்கனை.

இவர் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள திருப்பராய்த்துறையில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் குடும்பத்தில் ஒரு மண் குடிசையில் 1924–ஆம் ஆண்டு பிறந்தார். அதாவது ஆணாதிக்கம் இச்சமூகத்தை முழுமையாக ஆட்கொண்டிருந்த காலகட்டத்தில் இன்னும் சொல்லப்போனால் வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்த காலத்தில் பிறந்தவர். அதனால் ஒரு சாதாரணப் பெண்ணிற்குரிய பெண்மை நலங்கள் அனைத்தும் தம்மிடத்து இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

காதல் ஒருவனைக் கைப்பிடித்து – அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு இலக்கணமாக வாழமுற்பட்டுத் தம் பெற்றோர்கள் பார்த்து ஏற்பாடு செய்த ஆடவனைத் திருமணம் செய்து கொள்ளுகின்றார். கணவன், மாமன், மாமி ஆகியோரின் தேவைகளைக் குறிப்பறிந்து நிறைவேற்றியதாகவும், கணவனைக் கண்கண்ட தெய்வமாக மதித்துக் காலையில் எழுந்ததும் அவரின் திருவடிகளைத் தொட்டு வணங்கிய பிறகுதான் மற்ற வேலைகளைச் செய்ய முற்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். வீட்டு வேலைகளுடன் ஆசிரியர் பயிற்சியை முடித்த அம்மையார் கணவன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ளதை அறிகிறார். ஆனால் கோபம் கொள்ளவில்லை. பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை என்று கற்பிக்கப்பட்டிருந்ததாலும் ; பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் மிகப் பிழை இருப்பதை உணர்ந்திருந்ததாலும் தவறு செய்த கணவனைத் திருத்த முற்படுகிறார். திருந்த மறுத்த நிலையில் கணவனை விட்டுப்பிரிந்து இல்லறத் துறவியாகிறார். பூ வைத்தல், குங்குமம் இடுதல் போன்றவற்றையெல்லாம் நிறுத்தி, கதர் வெள்ளைப்புடவை, சட்டையை அணிந்து கொண்டு விதவைப் பெண்ணாகவே வாழத்தொடங்கினார். வானொலி நிலையத்தில் பணியாற்றியதால் கிடைத்த வருமானம் அவர் குடும்பம் நடத்துவதற்குப் போதுமானதாக இருந்தது.

இந்நிலையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு புதுமைப் பெண்ணாக மாறினார். பிறகு தான் தமிழ்நாடு ஷெடியூல்டு வகுப்புப் பெண்கள் நலச்

சங்கம் ஆரம்பித்து அதன் தலைவியானார். பெண்கள் விழிப்புணர்ச்சி முகாம்கள், அகில இந்திய மாதர் மகாநாடுகள், வரதட்சிணை ஒழிப்பு மகாநாடுகள் போன்றவற்றில் பங்கு கொண்டார். பெண்களிடத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் முனைப்பாக இருந்தார்.

"அடுப்படியே கதியாகி அடக்குமுறைக்கு அடிமையாகி, எடுப்பார் கைப்பிள்ளையாக, சமுதாயத்தில் எடுத்தெறியப்படும் ஆறறிவு கொண்ட பொருளாக, கல்யாணச் சந்தையில் விலை பேசப்படும் கருவியாக இன்னமும் பெண்கள் இருந்து வருவதற்குக் காரணம் பெண் சக்தியைப் பெண்களே உணராததால்தான் என்பதை விளக்கி,

பெண்சக்தி மகத்தானது பெண்சக்தி புனிதமானது,
பெண்சக்தி போற்றுதற்குரியது.
பெண்சக்தி ஆற்றல் மிக்கது, பெண்சக்தி
அறிவு நிறைந்தது, பெண்சக்தி அழகு நிறைந்தது
பெண்சக்தி சக்தி வாய்ந்தது – ஆம்
நீதியை நிலைநாட்டும் நீதிபதியாக
துன்பத்தில் துவள்வோருக்குத் தாதியாக
சமூக சேவைகளில் அன்னையாக
மனிதாபிமானப் பண்புகளின் தலைவியாக
அறிவியல் விந்தைகளின் விற்பன்னராக
ஆடல் கலைகளின் அரசியாக
கலாச்சார மேம்பாட்டின் சின்னமாக
எழில் ஓவியமாக மென்மையின் இருப்பிடமாக
தாய்மையின் குடும்பத்தலைவியாக
திறமைகள் பொதிந்த பெட்டகமாக
சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் சக்தியாகத்
திகழ்பவள் பெண் – பெண் – பெண்"

என்று பெண்களும் ஆண்களும் நிறைந்த கூட்டங்களில் வீராவேசத்துடன் கர்ஜிப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

சங்கத்தின் சார்பில்,

1. இரவுப் பள்ளி
2. குழந்தைகள் பொழுதுபோக்கு மன்றம்
3. கைக்குத்தல் அரிசி மையம்

4. இலவச குழந்தைகள் காப்பகம்
5. குடும்ப நலப்பணி மையம்
6. கறவை மாடு வழங்கும் யூனிட்
7. ஏழைக்குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் மையம்
8. சிறிய மருத்துவமனை
9. பணி புரியும் பெண்கள் விடுதி
10. இலவச முதியோர் இல்லம்
11. அம்பர் சர்க்கா யூனிட்
12. அகர் பத்தி யூனிட்
13. உடல் ஊனுமுற்ற குழந்தைகள் இல்லம்

போன்ற பல சமூக நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பெற்றன. இவற்றுள் சிலவற்றைத் தொடர்ந்து நடத்த இயலாமல் போய்விட்டதாகவும் ஏனையவை தொடர்ந்து நடைபெறுவதாகவும் குறிப்பிடுகின்றார்.

நூலின் இறுதியில் அவர் பெற்ற விருதுகள், பேட்டிகள், வாழ்த்து மடல்கள் அவர் ஆற்றிவரும் பொறுப்புகள் ஆகியவை அனைத்தும் இணைக்கப்பெற்றுள்ளன. 72 வயதாகும் அன்னை வீரம்மாள் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டுத் துன்புறும் நிலையிலும் இடைவிடாது சமூகத் தொண்டாற்றி வருகின்றார். அதனால்தான் அவரை எல்லோரும் அன்புடன் தென்னகத்துத் தெரஸா என்று அழைக்கின்றார்கள்.

தம்முடைய வாழ்க்கை வரலாறுகளைக் குறிப்பிடும் பொழுது அங்கங்கே பாரதியார், வள்ளுவர் ஆகியோரின் புரட்சிகரமான பாடல்களைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. பெண்ணுரிமை வேட்கை கொண்டவர்கள் பாரதியின் பாடல்களைப் படிக்கும் பொழுதும் உச்சரிக்கும் பொழுதும் நாடி நரம்புகள் வீறு கொண்டு எழுவதைப்போல் அன்னை வீரம்மாளின் நூலைப் படிக்கும் பொழுதும் எழுகின்றன.

இந்நூல் வாழ்க்கையில் தன்னம்பிக்கை இழந்து முடங்கிக்கிடக்கும் ஆண் பெண் அத்துணைப் பேருக்கும் சிறந்த வழிகாட்டியாய் அமையும். மனித சமுதாயத்தில் உள்ள அத்துணைப் பேரும் வாழ்க்கையில் ஒரு முறையேனும் படித்துப் பயன்பெறக்கூடிய ஓர் அருமையான நூல்.

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு.நா.கலியமூர்த்தி,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.ச.இராமநாதன்,
முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

திரு.த.கோ.ப.கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு.கலைமாச்செல்வர் எஸ்.டி காசிராஜன், ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

திரு.சிலம்பொலி சு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.,
சென்னை.

திரு.முனைவர்.கி.கருணாகரன்,
துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.தமிழண்ணல், எம்.ஏ.,பிஎச்.டி.,
மதுரை - 625 020.

திரு.முனைவர்.மு.கோவிந்தராசன்,
சென்னை.

திரு.முனைவர்.சோ.ந.கந்தசாமி, எம்.ஏ.,பி.லிட்.,பிஎச்.டி.,
முன்னாள் இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

திரு.முனைவர்.மா.இராமலிங்கம், எம்.ஏ.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

திரு.தமிழ்த்தொண்டர் கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு.முனைவர்.ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
சென்னை.

திரு.பேராசிரியர் பி.விருத்தாசலம், எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், த.உ.க. கலைக்கல்லூரி.

திரு.முனைவர்.இரா.குருநாதன்,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு.புலவர்.செ.இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

திரு.புலவர்.ஆ.பாலன், எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக் கல்லூரி.

திரு.புலவர்.மீனா.இராமதாசு, எம்.ஏ., எம்.எட்.,
முன்னாள் தலைமைத் தமிழாசிரியர், உ.மே. நி. பள்ளி

திரு.முனைவர்.பா.மதிவாணன், எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

Regd. No. TN/TJ/24 நூல் அஞ்சல்

பெறுநர்

திருமிகு [illegible]

ஆசிரியர்
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் ஆசிரியர் – ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ. 100 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச் சங்க மணிவிழா மலர்	ரூ. 80 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60 00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ. 6 00
பரணர் – ஆசிரியா.ஔவை சு.துரைசாமிப்பிள்ளை	ரூ. 35 00
பாயிர விருத்தி – ஆசிரியர் அரசஞ்.சண்முகனார்	ரூ. 60 00
அறிவியல் தமிழ்	ரூ. 125 00
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலர்	ரூ. 100 00

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

வெளியிடுபவர் : திரு.நா.கலியமூர்த்தி
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : இரா.வைஜெயந்திமாலா, லக்மி பிரிண்டர்ஸ்,
1086, காக்கா வட்டாரம், தஞ்சாவூர் - 613 009.